வக்கீல்

399

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

THE VAKIL ✦ TAMIL LAW MAGAZINE.

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :
தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.
(Estd. 1925)

“வக்கீல்”

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,
[ஆசிரியர்]

4 NOV 1953

1953 ஜூலை முதல் “வக்கீல்” புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளிநாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். “வக்கீல்” பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா “வக்கீல்” இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும். மற்ற விபரங்களுக்கு 1953 ஜூலை இதழ் பார்க்கவும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-
மானேஜர் “வக்கீல்” காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

“வக்கீல்”

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

வக்கீல்

பொருள் அடக்கம்

மணி 5 — செப்டம்பர் 1953 — இதழ் 9

காஷ்மீரும் அமெரிக்காவும் 3

சர்க்கார் அறிக்கைகள் 4

வழக்கும் - தீர்ப்பும்

* பஸ் டிரைவருடைய அஜாக்கிரதையினால் பஸ் விபத்து ஏற்பட்டது. பிரயாணி ஒருவர் இறந்தார். பஸ் கம்பெனியார் இறந்தவருடைய மனைவி மக்களுக்கு ரூ. 32,200 நஷ்ட ஈடு கொடுக்கும்படி தீர்ப்பு ஏற்பட்டது. 7

* ஒரு கோயிலின் திருவிழா சமயத்தில் கோயிலுக்கு வெளியே நடத்தப்படும் அன்னதான தர்மங்கள் அக்கோயிலைச் சேர்ந்த ‘கட்டளை’ ஆகுமா? 11

* கோயில் அர்ச்சகர்களும் அர்ச்சனை டிக்கட்டுகளும். 12

* சட்ட விரோதமாக வசூல் செய்யப்பட்ட விற்பனை வரித் தொகையைச் சர்க்காரிடமிருந்து திருப்பி வாங்கத் தாவா செய்ய, மூன்று வருடங்கள் வரை காலாவதி கெடு உண்டு. 12

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் 14

கேள்வியும் – பதிலும் 17

187726

"ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் [48 நாள்]
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை

ரூ. 43-12-0

ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டை தொகை, வெள்ளி விளம்பரம் தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N.B:- (1) ஆர்டர் கிடைத்த 9-ம்நாள் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V.P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்
கோட்டமருதூர் - அரகண்டநல்லூர் P. O.
தெ. ஆ. ஜில்லா.

இளம்பிள்ளைவாதம்

நீடித்ததற்கும் உத்தரவாத சிகிச்சை

இளம்பிள்ளை வாதம்—பட்சவாதம் ஒன்றே

M. R. ராஜகோபால பிள்ளை R.M.P.
மன்னப்பிள்ளைத் தெரு, மன்னார்குடி.

கல்யாண காலங்களுக்கு
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, : : கும்பகோணம்

ஹெட் ஆபீஸ் :

PHONE 84188

மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்

மதராஸ்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது

★ அன்னகிளி ★

சோப்

— தயாரிப்பவர் —

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

"ஜெயராம்" காயசுத்தி லேகியம்

REGD. No. 138512

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0   ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம் :— ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் மேலவீதி, கும்பகோணம்

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 5 செப்டம்பர் 1953 இதழ் 9

காஷ்மீரும் அமெரிக்காவும்

காஷ்மீர் ராஜ்யமானது இந்தியாவுடன் இணைந்தாலும் சரி, பாகிஸ்தானுடன் இணைந்தாலும் சரி, ஒன்றும் பிரமாதமான வித்தியாசம் ஏற்பட்டுவிடாது. இந்த உண்மையை இந்தியத் தலைவர்களும் பாகிஸ்தான் தலைவர்களும் நன்கு உணர்ந்திருக்கின்றனர். ஆனால் காஷ்மீர் பிரதேசமானது இரண்டிலும் சேராமல், ஒரு சுயேச்சை நாடாக இருக்குமேயானால், அதனால் நம் இரு நாடுகளுக்கும் பேராபத்து விளையக்கூடு மென்பதைச் சமீப நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டி விட்டன.

காஷ்மீரின் சில சதுர மைல் விஸ்தீரணத்தைச் சுயேச்சை நாடாக வைத்திருக்க, அமெரிக்கா ஏதோ சூழ்ச்சி செய்திருப்பதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் பெயரை வைத்துக்கொண்டு சில அமெரிக்கர்கள் காஷ்மீரில் வேறு ஏதோ காரியம் செய்து கொண்டிருக்கின்றனர் போலும்!

காஷ்மீர் பிரதம மந்திரியாக இருந்த ஷேக் அப்துல்லா, ஸ்டீவென்சன் என்ற அமெரிக்கப் பிரமுகருடன் எட்டு மணி நேரம் சம்பாஷணை செய்த பிறகு ஒரு புதிய மனிதராக மாறிவிட்டார்! அதிலிருந்து அவர் காஷ்மீர்பள்ளத்தாக்கை ஒரு சுதந்தர நாடாகவே வைத்திருக்க வேண்டுமென்று சொல்ல ஆரம்பித்து விட்டார்.

அமெரிக்காவின் நோக்கம் **என்ன?** நம் மீது அமெரிக்கர்களுக்கு அனுதாபமா? ஆசியாவின் வறுமை, ஏழ்மை, அறியாமை இவைகளை அகற்றவே அமெரிக்காவானது பாடுபட்டு வருவதாகப் பறை சாற்றுகின்றது! ஆனால், நிரபராதிகளான, லக்ஷக்கணக்கான ஆசிய வாசிகளை அணுகுண்டால் ஒரே நொடியில் பொசுக்கிய அமெரிக்காவை, ஜப்பான் மட்டுமல்ல, ஆசியா முழுவதும் இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு மறந்துவிடாது. ருஷ்யாவைப் பொசுக்க அமெரிக்கருக்கு, ருஷ்யாவின் அருகில் ஒரு கேந்திரமான இடம் வேண்டும். அங்கே தம்முடைய அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளை ரகசியமாக வைத்துக்கொண்டால், ஒரு சில நிமிஷங்களில் ருஷ்யாவையே பொடி சாம்பலாக்கி விடலாம். ருஷ்யாவுக்குச் சமீபமாக உள்ளது காஷ்மீர். காஷ்மீர் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைந்தால் இந்த வசதி ஒருநாளும் அமெரிக்கருக்கு ஏற்படாது. அப்துல்லாவை அதற்காக ஒரு சுதந்தர வீரராக்க வேண்டும்! அமெரிக்காவின் பகற் கனவு கலைந்து விட்டது. அப்துல்லா ஜெயிலில் இருக்கிறார்! அடாலி ஸ்டீவென்சன் தமக்கு ஒன்றும் தெரியாதென்று அமெரிக்காவிலிருந்து அறிக்கை விடுகிறார்!

சர்க்கார் அறிக்கைகள்

உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவு (1952) திருத்தம்.

1952ஆம் வருடத்திய உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவு (The Food Grains Licensing and Procurement Order-1952) என்ற மத்திய சர்க்கார் உத்தரவானது ஏற்கனவே (1) கோதுமை (2) நெல் (3) அரிசி (4) ஜோவர் (5) பஜ்ரா-இந்த தானியங்களுக்குத்தான் உண்டு. இப்போது ஏற்பட்ட திருத்தப்படி (7) சோளம் (8) பார்லி (9) ராகி கோடு போன்ற சில்லறை தானியங்கள் இவைகளுக்கும் இக்கட்டுப்பாடு உத்தரவு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

(S. R. O. 2011. இந்தியா கெஜட் 6-12-1952 சென்னை சர்க்கார் கெஜட் 1-7-1953 ரூல் சப்ளிமெண்ட் — பாகம் II பக்கம் 81.)

உணவு தானிய லைசென்சு கட்டணம் செலுத்த கெடு நீடிப்பு

உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவுப்படி 1954-ஆம் வருடத்திற்கு அபராதமில்லாமல் லைசென்சு கட்டணத்தை 30-11-1953 வரையிலும், அபராதத்துடன் 31-1-1954 வரையிலும் பெற்றுக்கொள்ள கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிந்திய வருடங்களுக்கும் அபராதமில்லாமல் நவம்பர் 30 தேதிக்குள்ளும், அபராதத்துடன் அடுத்த ஜனவரி மாதம் 31 தேதிக்குள்ளும் லைசென்சு கட்டணம் கட்டலாம்.

(15-7-1953 சென்னை சர்க்கார் கெஜட்— பாகம் II பக்கம் 924.)

உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவு— அதிகாரிகளின் சோதனை அதிகார விஸ்தரிப்பு.

மேற்கண்ட மத்திய சர்க்காரின் 1952-ஆம் வருடத்திய உத்தரவின் 13-ஆவது ஷரத்து திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கட்டுப்பாடு உத்தரவின் 10-ஆவது ஷரத்துப்படி உணவு தானியம் வைத்திருக்கும் ஒருவனை அத்தானியத்தை குறிப்பிட்ட பேருக்கு விற்பனை செய்யும்படி உத்தரவிட அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. அந்த உத்தரவுப்படி நடக்காதவர்களுடைய இடங்களையும் வண்டி முதலியவற்றையும்தான் அதிகாரிகள் சோதனை செய்யலாமென்று இருந்தது. இப்போது அதற்குப் பதிலாக—இக்கட்டுப்பாடு உத்தரவின் எந்த ஷரத்துக்கள் மீறப்பட்டதாக அதிகாரிகளுக்குத் தோன்றினாலும் சரி; அல்லது இக்கட்டுப்பாடு உத்தரவை அனுசரித்து ஏற்பட்ட குறிப்பிட்ட உத்தரவானது மீறப்பட்டதாக அவர்களுக்குத் தோன்றினாலும் சரி அவர்கள் மேற்கண்டபடி சோதனைகள் செய்யலாமென்று அவர்களுடைய சோதனை அதிகாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

(1-7-1953 சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II-பக்கம் 81.)

மற்றொரு திருத்தம். லைசென்சை ரத்து செய்வதுபற்றி.

மேற்கண்ட உத்தரவுப்படி கொடுக்கப்படும் லைசென்சுகளை ரத்து அல்லது 'சஸ்பெண்டு' செய்வதற்கு முன்பு லைசென்சுதார்களுடைய ஆட்சேபணைகளைச் சொல்லிக்கொள்ள அவர்களுக்கு நியாயமான சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று ஷரத்து 9 (2) திருத்தப்பட்டிருக்கிறது.

(1-7-1953 சென்னை சர்க்கார்கெஜட் - ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II பக்கம் 81.)

கிளாக்ஸோ, ஹார்லிக்ஸ் முதலிய சிசு ஆகாரங்கள்—கட்டுப்பாடுகள் ரத்து.

கிளாக்ஸோ, ஹார்லிக்ஸ், கௌ அண்டு கேட், ஆஸ்டர்மில்க் இந்த சிசு ஆகாரங்கள் மீதுள்ள

எல்லா கட்டுப்பாடு உத்தரவுகளும் மத்திய சர்க்காரால் ரத்து செய்யப்பட்டுள்ளன.

(S.R.O. 1365, S.R.O. 1366; S.R.O. 1367; S. R. O. 1368—இந்தியா கெஜட் 11-7-1953. சென்னை சர்க்கார் கெஜட்—12-8-1953 பாகம் II பக்கம் 1039.)

'லெவி' கொள்முதல் உத்தரவு திருத்தம்—குறிப்பிட்டவர்களுக்கு விதி விலக்கு அளிக்க அதிகாரம்.

தஞ்சை ஜில்லாவிலும் சில ஆந்திர ஜில்லாக்களிலும் அமுலிலுள்ள 1952ஆம் வருடத்திய 'லெவி' கொள்முதல் உத்தரவு திருத்தப்பட்டிருக்கிறது. இனி குறிப்பிட்ட நபருக்கோ, குறிப்பிட்ட வகை நபர்களுக்கோ இக்கட்டுப்பாடு உத்தரவிலிருந்து விதி விலக்கு அளிக்க ஜில்லா கலெக்டருக்கும் அவரிடம் இதற்காக அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்கும் அதிகாரமுண்டு—என்று ஷரத்து 3(2)ல் சேர்க்கப்பட்டிருக்கிறது.

G. O. 1227—12-8-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II-ருல் சப்ளிமெண்ட்—பக்கம் 93.)

ஜவுளி நூல் 'கண்ட்ரோல்' நிலை விளக்கம்.

(1) 10-7-1953 முதல் எல்லாவித ஜவுளி நூல் ரகங்களின் விநியோகம் விலைக் கட்டுப்பாடு பற்றிய கட்டுப்பாடுகள் பட்டில்தான் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதாவது மில்காரர்களும், மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் இனி ஜவுளி நூல் இவற்றை என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம். 1948-அம் வருடத்திய பருத்தி ஜவுளிக் கட்டுப்பாடு உத்தரவு (Cotton Textile Control Order-1948) ரத்து செய்யப்படவில்லை. ஆனால் அந்தக் கட்டுப்பாடு உத்தரவின் 22 (1) ஷரத்துப்படி ஜவுளி கமிஷனர் விலைபற்றி செய்திருக்கும் உத்தரவுகள் மட்டில் ரத்து செய்யப்பட்டுள்ளன.

(2) ஒரு பிரதேசத்திலிருந்து (வேறொன்) வேறு பிரதேசத்திற்கு மில் ஜவுளி, பவர்லூம் ஜவுளி, நூல் இவற்றை எடுத்துப் போக வியாபாரிகள் 'பர்மிட்' வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு ஊர்ஜிதத்தில் இருக்கிறது.

(3) சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவும், (Madras Cloth Dealers Control order—1948) சென்னை நூல் வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவும் (Madras Yarn Dealers Control order—1948) இரண்டும் இன்னும் அமுலில்தான் இருக்கின்றன; ரத்தாக வில்லை. ஆனால் உற்பத்தியாளர்கள் மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் இவர்கள் ஒருவருக்கொருவர்களும், வாடிக்கைக்காரர்களுக்கு நேரடியாகவும், ஜவுளி, நூல் இவற்றை இஷ்டப்பட்ட விலைக்கு விற்கலாம்.

(4) மொத்த கன்சைனிகளும், வியாபாரிகளும், இனி ரூமூ IIன்படி ஸ்டாக் ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை; ரூமூ IIIன்படி கலெக்டருக்கு மாதாந்தர ரிடர்னும் அனுப்ப வேண்டியதில்லை. இவர்கள் 'டைரெக்டர் ஆப் கண்ட்ரோல்டு கமாடிடீஸ்' என்ற அதிகாரியால் 29-5-1950ல் ஏற்படுத்தப்பட்ட அறிக்கைகள் 4, 5 இவைகளின்படி 'பில்'கள் கொடுக்க வேண்டியது மில்லை.

(5) ஆனால் மொத்த கன்சைனிகள் லைசென்சின் 8-ஆவது நிபந்தனைப்படி அவர் செய்யும் விற்பனைகளுக்கு 'பில்' அல்லது 'இன்வாய்ஸ்' கொடுக்கவேண்டும்.

(6) ஜவுளி நூல் வியாபாரிகள் சம்பந்தப்பட்டவரையில் வியாபார இடம், கிடங்கு, லைசென்சுக்கான ஜாமீன் தொகை—இவை சம்பந்தமான கட்டுப்பாடு விதிகள் எல்லாம் ஊர்ஜிதத்தில்தான் இருக்கின்றன.

(7) மொத்த கன்சைனிகளும், மொத்த வியாபாரிகளும் கண்ட்ரோல் விலைப்படி வாங்கிய சரக்குகளை 10-7-1953க்கு முன் கலெக்டர்கள் பிறப்பித்த உத்தரவுகளின்படி விநியோகம் செய்யவேண்டும்.

(19-8-1953—சென்னை சர்க்கார் அறிக்கை பார்க்கவும்.)

மோட்டார் விதிகள்

டிரைவர்கள் முதல் சிகிச்சை அத்தாட்சி தாகல் செய்ய கெடு 31-12-1953 முடிய உண்டு

1-7-1953 அல்லது அதற்குப் பிறகு பஸ், டாக்சி முதலிய பொது சேவை மோட்டார் டிரைவர்கள் டிரைவிங் லைசென்சு வாங்க இந்திய செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் அசோசியேஷனால் கொடுக்கப்படும் முதல் சிகிச்சை அத்தாட்சி (First Aid Certificate) தாகல் செய்ய வேண்டுமென்று 22-1-1952ல் 6A என்று ஒரு புது விதி சேர்க்கப்பட்டது. இப்பொழுது அவ்விதியிலிருக்கும் தேதி 1-1-1954 என்று திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது மேற்கண்ட சர்டிபிகேட் இல்லாமல் 1-1-1954 அல்லது அதற்குப் பின்பு டிரைவிங் லைசென்சு கொடுக்கப்படமாட்டாது.

(G. O. 2015—1-7-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I ருல் சப்ளிமெண்ட்—பக்கம் 243.)

தொழிற்சாலைச் சட்ட விதிகள் திருத்தம்

1950ஆம் வருடத்திய சென்னை தொழிற்சாலைச் சட்ட விதி 5 (1) (2) என்பது ஒரு தொழிற்சாலை எற்படுத்த லைசென்சு வாங்கிக் கொள்ளுவது பற்றியவை. இப்போது விதி 5ல் (3) (4) என்று இரண்டு புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புதிய விதி 5 (3)ன்படி ஒரு தொழிற்சாலையில் ஒரு உற்பத்தி வேலை (Manufacturing process) நடத்தவும் சீப் இன்ஸ்பெக்டரிடம் லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும். விதி 5 (4) என்பது பின்வருமாறு:—ஒரு தொழிற்சாலையை 'ரிஜிஸ்டர்' செய்துகொள்ளவும் 'லைசென்சு' கொடுக்கவும் சீப் இன்ஸ்பெக்டருக்கு ரிஜிஸ்டர் தபால் மூலம் மனுப்போடப்பட்டு, மூன்று மாதங்களுக்குள் அம்மனுவின் பேரில் என்ன உத்தரவு எற்பட்டதென்று மனுதாருக்கு யாதொரு தகவலும் கிடைக்காவிட்டால், மனுவில் கேட்டபடி ரிஜிஸ்ட்ரேஷனும் லைசென்சும் கொடுக்கப்பட்டு விட்டதாக பாவிக்கப்படும்—என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. விதி 6 (3) என்பது கீழே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது தொழிற்சாலை லைசென்சு பெற்றவர் எந்தத் தேதி முதல் யந்திரங்களின் குதிரை சக்தியையோ, அல்லது தொழிலாளர்களின் எண்ணிக்கையையோ அதிகரிக்க வேண்டுமென்று உத்தேசிக்கிறாரோ அதற்குக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்பே, லைசென்ஸைத் திருத்த சீப் இன்ஸ்பெக்டருக்கு மனுப்போட வேண்டும். லைசென்சை எப்படித் திருத்த வேண்டுமென்றும், அதற்கான காரணங்களையும் மனுவில் காணவேண்டும். புதிதாக விதி 12A என்று ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. விதி 3ன்படி சீப் இன்ஸ்பெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட பிளானும், விதி 5ன்படி கொடுக்கப்பட்ட லைசென்சும் தொழிற்சாலையில் இன்ஸ்பெக்டர்கள் சுலபமாகப் பார்த்துக் கொள்ளும்படி தயாராக வைத்துக் கொள்ளப்படவேண்டும். சீப் இன்ஸ்பெக்டருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும் பிளான்கள், ராஜ்ய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட அத்தாட்சியுடைய 'டிராப்ட்ஸ்மன்' அந்தஸ்திற்குக் குறையாத ஒருவரால் தயார் செய்ததாக இருக்கவேண்டும். மேலும் இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, தொழிற்சாலையில் உற்பத்தி வேலைகள் (Manufacturing Process) நடத்த அக்கட்டடம் லாயக்கானது என்று ஒரு அத்தாட்சி (Certificate of Stability) பெற்று அதை தொழிற்சாலைக்காரர் பாக்டரி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும். அந்த 'சர்டிபிகேட்' அனுப்பாமல் உற்பத்தி வேலைகள் செய்யக்கூடாது. சர்டிபிகேட்டானது இவ்விதியில் கண்ட நமூனாப்படி இருக்கவேண்டும். மேலும் இவ்விதியில் குறிப்பிட்ட யோக்கியதாம்சங்களுள்ள என்ஜினியர்கள்தான் மேற்கண்ட 'சர்டிபிகேட்' கொடுக்க வேண்டும். பப்ளிக் ஒர்க்ஸ், எலெக்ட்ரிஸிடி, ஹைவேஸ் இந்த இலாகாக்களில் எக்ஸிகூடிவ் என்ஜினியர் அல்லது டிவிஷனல் என்ஜினியர் அந்தஸ்துக்குக் குறையாத என்ஜினியர்கள்—வேலையிலிருந்தாலும் ரிடையராகி இருந்தாலும் மேற்கண்ட சர்டிபிகேட் கொடுக்கலாம். வேறு சில யோக்கியதாம்சங்கள் உள்ளவர்களும் கொடுக்கலாம். வேறு சில திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

(5-8-1953 சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்டு-பாகம் I பக்கம் 271.)

தொழில் தகராறு விதிகள் திருத்தம் ரிகார்டுகள் எவ்வளவு காலம் வைத்துக்கொள்ளப் படவேண்டும் என்பதுபற்றி

1947-ம் வருடத்திய தொழில் தகராறுச் சட்டப்படி எற்பட்டிருக்கும் விதிகளில் விதி 28, 29 என்று இரண்டு புதிய விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தொழில் கோர்ட்டுகளில் செக்ஷன் 33ன்படி தாகல் செய்யப்படும் மனுக்கள் முடிவான தீர்ப்பு தேதியிலிருந்து 3 வருடங்களும், மற்ற மனுக்கள் 6 வருடங்களும், சமரச ஆபீசர்கள் முன்பு அனுப்பப்படும் தகராறுகளைப்பற்றிய தஸ்தவேஜுகள் 6 வருடங்களும் மற்ற தகராறுகள் பற்றிய தஸ்தவேஜுகள் ராஜியான தேதியிலிருந்து 6 வருடங்களும் வைத்துக் கொள்ளப்பட வேண்டும். அக்கெடுவுக்குப் பிறகு அந்த தஸ்தவேஜுகளை கிழித்துவிடலாம் அல்லது பொசுக்கி விடலாம்.

(G. O. 2898-22-7-1953 தேதி சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் I பக்கம் 263. குறிப்பு: தொழில் தகராறு விதிகள் 17-2-1948 தேதி கெஜட்டில் பிரசுரமாகி இருக்கிறது.)

வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

பஸ் டிரைவருடைய அஜாக்கிரதையினால் பஸ் விபத்து ஏற்பட்டது. பிரயாணி ஒருவர் இறந்தார். பஸ் கம்பெனியார் இறந்தவருடைய மனைவி மக்களுக்கு ரூ. 32,200 நஷ்ட ஈடு கொடுக்கும்படி தீர்ப்பு ஏற்பட்டது.

[ஆதாரம்:—66 லா வீக்லி—677. சென்னை ஹைகோர்ட்.]

தாராபுரத்திலிருந்து பழனிக்குப் போகும் பஸ் ஒன்று 20-9-1947 தினம் பிற்பகல் 3 மணிக்குத் தாராபுரம் போலீஸ் ஸ்டேஷனை விட்டுக் கிளம்பியது. அப்பொழுது அதில் 16 பிரயாணிகளும் டிரைவரும் இருந்தனர். பிறகு அப் பஸ், ஸ்டாண்டுக்கு வந்து மற்றப் பிரயாணிகளையும் ஏற்றிக்கொண்டது. மொத்தம் 26 பிரயாணிகள் இருந்தனர். சரியாக மணி 3-5க்கு அப் பஸ் தாராபுரத்தை விட்டுக் கிளம்பியது. அது வரையில் அப் பஸ்ஸில் ஷெரிபுடீன் என்ற ஒரு டிரைவர் இருந்தார். பஸ் கிளம்பும் தறுவாயில், அக்கம்பெனியின் காஷியர் அங்கே வந்து, ஜோஸப் என்பவரை டிரைவராக இருக்கச் சொல்லிவிட்டு, அவர் அந்த ரஸ்தாவுக்குப் புதிதானபடியால், ஷெரிபுடீனையும் அவருடைய பக்கத்திலேயே அமர்ந்து கொண்டு ஜோஸப்புக்கு உதவும்படி ஏற்பாடு செய்து விட்டுப்போனார்.

ஜோஸப் தான் பஸ்ஸை ஓட்டினார். பதினாலாவது மைலில் தும்பலப்பட்டி என்ற ஊர் வந்ததும், ராஜரத்தினம் என்பவரும் அவருடைய சகோதரரும் வேறு ஒருவரும் பஸ்ஸில் ஏறிக்கொண்டனர். அங்கிருந்து கிளம்பிய பஸ் பழநி நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. மூன்றாவது மைலில் புளியம்பட்டி என்ற ஊர் இருக்கிறது. அங்கே அப்பஸ் ஒரு பாலத்தைத்தாண்டவேண்டி இருந்தது. பாலம் தாண்டியவுடன் ரஸ்தாவானது வளைந்தும் சரிவாகவும் இருக்கிறது. ரோட்டுக்குக் கிழக்கே ஒரு வடிகால். அப்பள்ளத்தை அடையாளம் காண்பிப்பதற்காக இரண்டு அடி உயரத்தில் ஐந்து கருங்கற்கள் புதைக்கப்பட்டிருந்தன. பாலத்தைத் தாண்டிய நமது பஸ்ஸானது மேலே கண்ட கற்களில் ஐந்தாவது கல்லில் அதிக வேகத்துடன் மோதி, அக்கல்லானது பெயர்ந்து உடைந்து போனதுடன், அக்கல்லிலிருந்து இருபது அல்லது இருபத்து ஐந்து அடி தூரத்திலுள்ள ஒரு புளிய மரத்திலும் பஸ் மோதியது. புளிய மரத்தின் பட்டை பெயர்ந்தது. அதிலும் பஸ் நிற்காமல் இன்னும் கொஞ்ச தூரம் சாய்வாகப் போய்த்தான் நின்றது.



இனி பஸ்ஸிலிருந்த பிரயாணிகளைக் கவனிப்போம். சிலர் ஆடி அடிபட்டு, பஸ்ஸுக்குள்ளேயே காயமாக விழுந்தனர். பிரயாணிகளில் ஒருவரான ராஜரத்தினம், அப் புளியமரத்திலிருந்து பதினாறரை அடி

தெற்கே இருக்கும் குழியில்போய் விழுந்தார்.

இதற்குள் எதிரே பழநியிலிருந்து அதே கம்பெனியாரின் பஸ் ஒன்று வந்தது. அதைத் திருப்பி, அதிலேயே ராஜரத்தினமும் மற்றக் காயமடைந்த பிரயாணிகளும் ஏற்றப்பட்டு, பழநிக்குச் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். அடிபட்ட பஸ்ஸை ஷெரிபுடன் அங்கிருந்து ஓட்டி 3 மைலிலுள்ள பழநிகொண்டு போய்ச் சேர்த்தார். பழநி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட ராஜரத்தினத்தின் தேக நிலைமை அபாயமாயிற்று. அன்று இரவு 7 மணிக்கு சப்மாஜிஸ்ட்ரேட் அவருடைய மரண வாக்கு மூலத்தைப் பதிவு செய்தார். 22ஆம் தேதி ராஜரத்தினம் மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். அவர் 23—9—1947 தினம் அங்கேயே இறந்து விட்டார்.

இறந்த ராஜரத்தினத்தின் தகப்பனும், மனைவியும், ஐந்து குழந்தைகளும் வாதிகளாக இருந்து தங்களுக்குப் பஸ் கம்பெனியிடமிருந்து நஷ்டஈடு கிடைக்க வேண்டுமென்று தாவா செய்தனர். இத்தாவாவானது 1855-ஆம் வருடத்திய 13-ஆம் சட்டமாகிய மரணம் விளைவிக்கும் எதிர்பாராச் சம்பவச் சட்டத்தின்படி (Fatal Accidents Act 1855) தொடரப்பட்டது. விபத்து ஏற்பட்ட போது அப்பஸ்ஸை ஓட்டிய டிரைவரானவர் திறமையும் பயிற்சியும் அற்றவர் என்றும், அவர் மூர்க்கத்தனமாகவும், அஜாக்கிரதையாகவும் அப்பஸ்ஸை ஓட்டியதாகவும், அதனால்தான் அச் சம்பவம் ஏற்பட்டு அதில் ராஜரத்தினம் உயிரிழந்தாரென்றும், சிப்பந்தியின் செய்கையால் ஏற்படும் விளைவுகளுக்கு முதலாளியே சட்டப்படி நஷ்ட ஈடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என்றும் வாதிகள் நஷ்ட ஈடு கேட்டிருந்தனர்.

பஸ் கம்பெனியார் கட்சியாடினர். டிரைவரைப் பற்றிப் பிராதில் சொல்லப்பட்டிருந்ததை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அவர் மூர்க்கத்தனமாகவோ, அஜாக்கிரதையாகவோ ஓட்டினார் என்பதையும் கம்பெனியார் ஒப்புக் கொள்ளவில்லை. பஸ்ஸின் பின்புறமிருந்த நடு 'போல்ட்' ஒன்று திடீரென்று புரண்டு விட்டதால் தான் இச்சம்பவம் ஏற்பட்டதென்றும், அது தங்களுடைய அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றும், தாங்கள் நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை என்றும், மேலும் பிராதில் கேட்கப்பட்டிருந்த நஷ்டஈட்டுத் தொகையும் மிக அதிகமாக இருக்கிறதென்றும் கட்சியாடினர்.

இவ்வழக்கை விசாரித்த சப்ஜட்ஜ் அவர்கள் வாதிகளின் கட்சியை ஏற்றுக் கொண்டு முன் சொன்ன சட்டத்தின் 1-ஆவது செக்ஷன்படி இறந்த பஸ் பிரயாணியின் தகப்பனாருக்கு ரூ. 3600 நஷ்டஈடும் மனைவிக்கும் குழந்தைகளுக்குமாக ரூ. 25,200 நஷ்டஈடும் இது தவிர மேற்படி சட்டத்தின் 2ஆவது செக்ஷன்படி மனைவி குழந்தைகளுக்கு ரூ. 6000 நஷ்டஈடும் அளித்துத் தீர்ப்பளித்தனர். இத்தீர்ப்பின் பேரில் பஸ் கம்பெனியார் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். சென்னை ஹைகோர்ட்டார், இறந்தவருடைய தகப்பனாருக்குக் கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையை மட்டில் ரூ. 1000 ஆகக் குறைத்து, மற்ற நஷ்டஈட்டுத் தொகைகளை அப்படியே சரி என்று ஏற்றுக் கொண்டு பஸ்காரரின் அப்பீலைத் தள்ளித் தீர்ப்பளித்தனர். இத்தீர்ப்பில் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும் உயர் நீதிபதி வெங்கடராமய்யர் அவர்களும் இது சம்பந்தமான சட்டங்களை மிகத் தெளிவாக விளக்கி இருக்கின்றனர்.

ஒருவருடைய சட்ட விரோதமான செய்கையினாலோ, அல்லது அஜாக்கிரதையினாலோ, அல்லது தவறினாலோ, வேறு ஒருவருக்குக் கெடுதி ஏற்பட்டால், அவர் கெடுதி அடைந்தவருக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்பது ஒரு பொதுவான சட்டவிதி. உதாரணமாக, ஒருவர் அஜாக்கிரதையாக ஒரு மோட்டார் வண்டியை ஓட்டி ரஸ்தாவில் நடந்து கொண்டிருப்பவர் ஒருவர் மீது ஏற்றி விடுகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவருடைய கைகளோ கால்களோ அறைபட்டு உபயோகமற்றுப் போய் விடுகின்றன. கைகால்களை இழந்தவர் மோட்டார் ஓட்டியவர் மீது நஷ்டஈடு கேட்டு தாவா செய்யலாம். மோட்டார் ஓட்டியவர் அம்மோட்டாருக்குச் சொந்தக்காரரல்லாமல் டிரைவராக இருந்தால், மோட்டாரின் சொந்தக்காரரும் நஷ்ட ஈடு கொடுக்கக் கடமைப்பட்டவராவார். ஏனென்றால் சிப்பந்தி அல்லது ஊழியருடைய நடத்தை

அல்லது தவறுதலால் ஏற்படும் நஷ்டங்களை முதலாளியும் கொடுக்கக் கடமைப்பட்டிருக் கிறார் என்பதும் வேறு ஒரு சட்டவிதி. ஆனால் இம்மோட்டார் விபத்தில் கைகால் களை இழந்தவர்தான் நேரடியாகத் தமக்கு நேர்ந்த விபத்துக்காக நஷ்டஈடு கேட்கலாம். அது அவருடைய சொந்த நஷ்டம். அவரைத் தவிர வேறு ஒருவரும் நஷ்டம் கேட்கமுடி யாது. ஆகையால், மோட்டார் விபத்தில் மாட்டிக் கொண்டவர் கைகால்களை மட்டில் இழக்காமல், உயிரையே இழந்து விட்டால், ஒருவரும் நஷ்டஈடு கேட்க முடியாமல் சட்டம் இருந்தது. ஏனென்றால் நஷ்டஈடு கேட்க உரிமை உள்ளவர் இறந்து விட்ட தால், இந்த அர்த்த மற்ற நிலைமையை மாற்றத்தான் 1855 ஆம் வருடத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதற்கு "மரணம் விளைவிக்கும் எதிர்பாராத சம்பவச்சட்டம்" (Fatal Accidents Act 1855) என்று பெயர். இச்சட்டப்படி, விபத்தில் மாட்டிக் கொண்டவர் மரணமடைந்தாலும், விபத்தை ஏற்படுத்தியவருடைய பொறுப்புப் போய் விடாது. விபத்தில் மரணமடைந்தவருடைய மனைவி, புருடன், பெற்றோர்கள், குழந்தை கள் இவர்கள் தாவா செய்து நஷ்டஈடு பெற லாம். அதாவது யாருடைய சட்ட விரோத மான செய்கையாலோ, அஜாக்கிரதை யினாலோ, அல்லது தவறினாலோ விபத்து ஏற் பட்டதோ அவர் மீது தாவா செய்யலாம். விபத்தில் மாட்டிக் கொண்டவர் மரண மடைந்த காரணத்தினால் முன் சொல்லப் பட்ட உறவினர்கள் என்ன நஷ்டம் அடைந் தார்களோ அதை ஈடு செய்ய வேண்டும். இது தான் அச்சட்டத்தின் செக்ஷன் 1.

இது தவிர விபத்தை ஏற்படுத்தியவர் வேறு ஒரு விதமான நஷ்டஈடும் கொடுக்க வேண்டும். விபத்தில் இறந்தவர் என்ன நஷ்டஈடு அடைந்திருக்கக் கூடுமோ அத் தொகையை அவருடைய வார்சுகள் அடைய உரிமை உள்ளவர்களாவார்கள். உதாரணமாக, இறந்தவர் இன்னும் பத்து வருடங்கள் உயிருடனிருந்து சம்பாதித் திருந்தால் அவர் எவ்வளவு சம்பதித்தி ருக்கக்கூடுமோ அதை நஷ்ட ஈடாக வார்சு கள் கேட்கலாம். இந்த வார்சுகள் முன் கண்டபடி மனைவி, புருடன் பெற்றோர் அல்லது குழந்தைகளாக இருந்தாலும் இருக் கலாம்; இவர்கள் ஒருவருமில்லாமல் வேறு எட்டிய வார்சுகளாக இருந்தாலும் இருக்க லாம். அவர்கள் யாராக இருந்தாலும் இந்த நஷ்ட ஈட்டை அடையலாமென்பதுதான் அச் சட்டத்தின் 2ஆவது செக்ஷன். பிரஸ் தாப வழக்கில் தாவா செய்த வாதிகளே மேலேகண்ட இரண்டு ஷரத்துக்களின் படிக் கும் இரண்டுவகை நஷ்ட ஈடுகளையும் அடை யப் பாத்தியஸ்தர்களாக இருந்தார்கள்.

இவ்வழக்கில் நீதிபதிகள் டிரைவர் ஜோஸப்பின் அஜாக்கிரதையினால் தான் ராஜரத்தினம் இறந்தார் என்ற முடிவுக்குத் தான் வந்தனர். ஜோஸப்புக்கு 'டிரைவிங்' லைசென்சு இருந்தது. ஆகையால் அவரை ஓட்டும்படி விட்டதே முதலாளிகளின் தவறு என்று சொல்லமுடியாது. ஜோஸப் அந்த ரஸ்தாவுக்குப் புதியவர். ஆகையால் தான் பஸ் கம்பெனிக்காரர்கள் அவருடைய பக்கத் தில் வேறு ஒரு பழகிய டிரைவரையும் இருக் கும் படி ஏற்பாடு செய்தனர். அதுவும் சரி; முதலாளியின் அஜாக்கிரதையால் இவ்விபத்து ஏற்படவில்லை என்று மட்டில் சொல்லலாம். ஆனால் சிப்பந்தி அல்லது ஊழியருடைய அஜாக்கிரதையாலோ, தவறாலோ இவ்விபத்து ஏற்பட்டிருந்தாலும், முதலாளி தப்பமுடி யாது; முதலாளி அதற்கும் நஷ்டஈடு கொடுத்தே தீரவேண்டும். ஆகையால் இவ் விபத்துக்கு டிரைவர் ஜோஸப்பின் அஜாக் கிரதை தான் காரணமா என்ற பிரச்னை எழுந்தது.

மோட்டார் விபத்து ஒன்று ஏற்பட்டால், அது டிரைவருடைய அஜாக்கிரதையாலோ, அல்லது மிதமிஞ்சிய வேகத்தில் மோட்டார் ஓட்டப்பட்டதாலோ ஏற்பட்டதா, என்பதை அந்தந்தக் குறிப்பிட்ட சம்பவத்தின் சூழ்

நிலையைக் கொண்டு தான் சொல்ல வேண்டும். மோட்டார் ஓட்டப்பட்ட வேகமானது மிதமிஞ்சியதாக இருந்ததா, அல்லவா, என்பதை நிர்ணயிக்கப் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ரஸ்தாவின் நிலைமை, மோட்டார் ஓடும் இடம், காலம் முதலியவற்றைப் பார்க்க வேண்டும். நல்ல சிமெண்டு ரோடு ஒன்றில் ஓடும் மோட்டாருக்கு எந்த வேகமானது நியாயமாகக் கருதப்படுகின்றதோ, அதே வேகத்துடன் அம் மோட்டாரானது மேடு பள்ளங்கள், குண்டு குழிகள் உள்ள வேறு ஒரு ரஸ்தாவில் ஓட்டப்பட்டால் அது மித மிஞ்சிய வேகமாகக் கருதப் படலாம்; ஜனப் புழக்கமில்லாத இடங்களில் ஓடும் அதே வேகத்துடன் ஒரு மோட்டாரை ஜன நெருக்கடியுள்ள ஒரு இடத்திலும் ஓட்டுவது அபாயகரமாகும். அதைப்போலவே யாவரும் தூங்கிக் கொண்டிருக்கும் நடு நிசியில் ஓட்டும் அதே வேகத்துடன், அம் மோட்டாரை அதே இடத்தில் ஆபீஸ்களும் கடை கண்ணிகளும் நடக்கும் சமயத்தில் ஓட்டுவது ஆபத்தாகும். இதுபோன்ற விஷயங்களைக் கவனித்துத் தான் ஜோஸப் ஓட்டியது மிதமிஞ்சிய வேகத்துடனு அல்லவா என்று நிர்ணயிக்கப் படவேண்டும்.

விபத்து ஏற்பட்ட இடத்தில் ஒரு சிறிய பாலம் இருக்கிறது; பாலம் தாண்டியவுடன் ரஸ்தா நன்ருக வளைகின்றது. கீழ் நோக்கிப் போகின்றது. பக்கத்தில் ஒரு பெரிய பள்ளம். அப்பள்ளத்தில் மோட்டார் கார்கள் விழாமலிருக்கவே இரண்டடி உயரத்தில் 5 கற்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடத்தை அடைந்ததும் மோட்டாரை மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் ஜோசப் ஓட்டியிருக்க வேண்டும். இந்த இடத்தில் மணிக்கு 20 மைல் வேகத்தில் பஸ்ஸை, ஜோஸப் ஓட்டியதாக ருசுவாயிற்று. இது 'மிதமிஞ்சிய வேகம்' என்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

மேலும், இப்பஸ் ஒரு கல்லிலும், புளிய மரத்திலும் மோதி, ரஸ்தாவுக்கு வெளியே போய்விட்டதிலிருந்தே அதை டிரைவர் ஜோஸப் ஜாக்கிரதையாக ஓட்டவில்லை என்று வெட்டவெளிச்ச மாகிறது. அப்படி ஏற்பட்டது, ஜோஸப்பின் அஜாக்கிரதையால் அல்ல என்பதைப் பஸ் கம்பெனியார்தான் ருசுப்பிக்கவேண்டும். அவர்கள் அப்படி ருசுப்பிக்க முடியவில்லை. ஆகையால் டிரைவருடைய அஜாக்கிரதையால் தான் இவ்விபத்து ஏற்பட்டதென்று சட்டப் படிக்கே ஊகிக்கலாமென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர்.

இரண்டாவதாக, வாதிகளுக்கு அளிக்கப் பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையானது மிக அதிகமானதென்று ஹை கோர்ட்டில் வாதாடப்பட்டது. இறந்த ராஜரத்தினம் என்பவர் அந்தஸ்தும் செல்வமும் படைத்தவர். அவருக்குப் பழனியில் இரண்டு லக்ஷரூபாய் பெறுமான முள்ள கட்டடங்களும் 120 ஏகர் நஞ்சை நிலங்களும் இருந்தன. அவருடைய குடும்பத்தில் ஒரு சித்த வைத்திய சாலை நடத்தி வந்தனர். ராஜரத்தினமும் ஒரு டாக்டர். அவருக்கு மாதம் ரூ. 200 முதல் ரூ. 250 வரையில் வைத்தியத்தில் வருமானமும் கிடைத்து வந்தது. அவர் சிலகாலம் பழநியில் முனிசிபல் கவுன்சிலராகவும், வைஸ் சேர்மனுகவும் இருந்திருக்கிருர். அவரும் சொந்தத்தில் மோட்டார் கார் வைத்துக் கொண்டிருந்தார். அவர் இறக்கும்போது வயது 34 தான். மனைவியையும் 4 மைனர் குழந்தைகளையும் விட்டு விட்டு இறந்தார். இது எல்லா வற்றையும் உத்தேசித்து, அவரை இழந்த காரணத்தினுல் அவருடைய மனைவிக்கும் குழந்தைகளுக்குமாக அளிக்கப் பட்ட நஷ்ட ஈடு ரூ. 25200 என்பது நியாமானதே, என்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். ஆனுல் தகப்பனுருக்கு அளிக்கப்பட்ட ரூ. 3600 ஆனது ரூ. 1000 ஆகக் குறைக்கப்பட்டது. முன் சொன்ன சட்டத்தின் இரண்டாவது

செக்ஷன்படி ராஜரத்தினத்தின் 'எஸ்டேட்' அதாவது வார்சுகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்காகத் தனியாக மனைவி குழந்தைகளுக்கு இன்னும் ரூ. 5000 தனி நஷ்ட ஈடாக அளிக்கப்பட்டதும் சட்டப்படி சரியே என்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். இந்த இருவகை நஷ்ட ஈடுத் தொகைகளும் தனித்தனியே அளிக்கப்பட வேண்டியதுதான். ஒரே சம்பவத்திற்காக, அதே நபர்களுக்கு இரண்டு தடவை நஷ்ட ஈடு அளிக்கச் சட்டம் இடங் கொடுக்கவில்லையே ஒழிய, ஒருவகை நஷ்ட ஈட்டுத் தொகையை உத்தேசித்து, அதற்கு ஏற்றவாறு மற்றொரு வகை நஷ்ட ஈட்டுத் தொகையை நிர்ணயிக்கச் சட்டம் இடம் கொடுக்குமென்றும், இவ்வழக்கில் அப்படித்தான் இருவகை நஷ்ட ஈட்டுத் தொகைகளும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர்.

இப் பஸ் விபத்திற்காக ஒரு பிரயாணி சம்பந்தப்பட்டவரையில் பஸ் கம்பெனியார் ரூ. 32,200 நஷ்ட ஈடு கொடுக்க நேர்ந்தது. காயமடைந்த மற்ற பிரயாணிகள் என்ன செய்தார்களோ தெரியவில்லை.

ஒரு கோயிலின் திருவிழா சமயத்தில் கோயிலுக்கு வெளியே நடத்தப்படும் அன்னதான தர்மங்கள் அக்கோயிலைச் சேர்ந்த 'கட்டளை' ஆகுமா?

[ஆதாரம்:—66 லா வீக்லி 694 - சென்னை ஹைகோர்ட்.]

காவிரி நதிக்கரையிலிருக்கும் குணசீலம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதிப் பெருமாள் கோயிலில், ரத உத்சவம் நடக்கும் போது, பல இடங்களிலிருந்தும் அங்கே ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள். அச் சமயத்தில் அங்கே கூடும் யாத்திரிகர்களுக்குச் சாப்பாடு வசதிகள் செய்யப் பல தர்மங்கள் இருக்கின்றன. ரெட்டிமார்கள், நாயுடுமார்கள், பிள்ளைமார்கள், பிராமணர்கள் போன்றவர்களுக்குத் தனித்தனி அன்னதான தர்மங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று "ஸ்ரீ குணசீலம் பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் புரட்டாசி ரதோத்சவ சமாராதனை" என்ற பெயரால் நடத்தப்படும் தர்மமாகும். தேர் திருநாள் சமயத்தில் அங்குக் கூடும் பிராமணர்களுக்குச் சாப்பாடும் தங்குமிடமும் அளிப்பதற்காக நன்கொடைகள் வசூலித்து இத்தர்மம் ஏற்பட்டது. அந்த நன்கொடைத் தொகையில் மிகுந்த பணத்தைக்கொண்டு அத்தர்மத்திற்காக ஏழு ஏகர் நஞ்சை நிலம் வாங்கப்பட்டது; அந்நிலத்தின் வருமானத்தைக் கொண்டும், அவ்வப்பொழுது வசூலாகும் நன்கொடைகளைக் கொண்டும் சமாராதனை நடத்தப்பட்டு வருகிறது.

இத்தர்மமானது ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் கோயிலைச் சேர்ந்த ஒரு கட்டளை என்று சென்னை இந்து மத தர்ம பரிபாலன போர்டார் தீர்மானித்தனர். இத் தீர்ப்பைத் திருச்சி ஜில்லா ஜட்ஜ் ரத்துச் செய்தார். அதன் பேரில் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் ஏற்பட்டது. சென்னை ஹைகோர்ட்டில் திருச்சி ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பே உறுதிசெய்யப்பட்டது. இத்தர்மமானது கோயிலைச் சேர்ந்த ஒரு கட்டளை அல்ல என உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

சென்னை இந்துமத தர்ம பரிபாலனச் சட்டப்படி ஒரு **கோயிலிலோ** (In a Temple) மடத்திலோ செய்யப்படும் தர்மங்கள்தான் கோயில் அல்லது மடத்தைச் சேர்ந்த கட்டளையாகும் என்று இருக்கிறது. பிரஸ்தாப தர்மம் சம்பந்தப்பட்ட வரையில், கோயிலுக்குள் பிராமணர்களுக்கு சாப்பாடு போடப்படவில்லை. கோயிலுக்கு வெளியே நூறு கஜத்திற்கு அப்பாலிருக்கும் சேஷகிரி அய்யர் சத்திரத்தில்தான். உத்சவம் நடக்கும் பதினொரு நாட்களிலும் பிராமணர்களுக்குச் சாப்பாடு போடப்பட்டு வருகிறது. கோயில் டிரஸ்டிகளுக்கு இத்தர்ம சொத்தைப் பற்றியாவது சாப்பாட்டைப் பற்றியாவது எவ்வித உரிமையும் மேன்பார்வையும் இல்லை. ஆகையால் இத்தர்மமானது கோயில் சம்மந்தமான ஒரு கட்டளை அல்ல என்று உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

187726

187726

கோயில் அர்ச்சகர்களும் அர்ச்சனை டிக்கட்களும்

ஒரு கோயிலின் நிர்வாக அதிகாரியானவர், டிக்கட் வாங்கித்தான் அக்கோயிலில் அர்ச்சனை செய்யப்படவேண்டுமென்ற ஏற்பாட்டைப் புதிதாக உட்புகுத்த முடியுமா என்ற பிரச்னையைப்பற்றிச் சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர். அர்ச்சனைக்கு டிக்கட் முறையை ஏற்படுத்துவதும், டிக்கட் தொகைகளைக் கோயிலும், அர்ச்சகர்களும் பிரித்துக் கொள்ளுவதும் சட்ட விரோதமாகாதென்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். பரம்பரைப் பாத்தியமுள்ள அர்ச்சகர்களும் கோயில் ஊழியர்களே; கோயிலின் பிரதிநிதியாகிய டிரஸ்டிகளின் அதிகாரத்திற்கு அர்ச்சகர்கள் உட்பட்டவர்களே யாவார்கள்; கோயில் ஊழியர் ஒருவருக்குச் சட்டப்படி எவ்விதப் பாத்தியங்கள் இருப்பினும் சரி, எவ்விதக் காரியங்களைச் செய்து அதற்கான ஊதியங்களை அடையும் உரிமைகள் அவர்களுக்கு இருப்பினும் சரி, கோயிலின் நன்மையை உத்தேசித்து அவற்றை எல்லாம் ஒழுங்கு செய்யும் அதிகாரம் கோயிலின் நிர்வாக அதிகாரிகளிடமிருக்கிறது.

1951-ஆம் வருடத்திய 19-ஆவது சட்டமாகிய சென்னை இந்துமத தர்ம பரிபாலனச் சட்டத்தின் செக்ஷன் 50ல், அர்ச்சனை விஷயம் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஷரத்தின்படி கோயிலில் நடக்கும் அர்ச்சனைகளுக்கு எவ்வளவு கட்டணம் என்பதையும், அக்கட்டணத்தில் அர்ச்சகர்களுக்கு எவ்வளவு பாகம், கோயிலுக்கு எவ்வளவு பாகம் என்பதையும் நிர்ணயம் செய்ய டிரஸ்டிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அக்கோயில் சம்பந்தமான பழக்க வழக்கங்களோ, கோர்ட்டு டிக்ரிகளோ, வேறு விதமாக இருந்தபோதிலும், இந்த அதிகாரம் டிரஸ்டிகளுக்கு உண்டு. இந்த அதிகாரத்தைக் கமிஷனருடைய பொது அல்லது குறிப்பிட்ட உத்தரவுகளுக்குட்பட்டு டிரஸ்டிகள் செலுத்தலாமென்று புதிய சட்டத்தில் வியக்தமாகக் கண்டிருப்பதால் இனி இவ்விஷயத்தைப்பற்றிய சந்தேகங்கள் எழ இடமில்லை என உயர் நீதிபதிகள் கோவிந்த மேனன் அவர்களும் பாஷியர் அஹமது சையது அவர்களும் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்திருக்கின்றனர். (தீர்ப்புத் தேதி 11-3-1953. 1948-ஆம் வருடத்திய அப்பீல் நம்பர் 611. சென்னை ஹைகோர்ட்.)

சட்ட விரோதமாக வசூல் செய்யப்பட்ட விற்பனை வரித் தொகையைச் சர்க்காரிடமிருந்து திருப்பி வாங்கத் தாவா செய்ய, மூன்று வருடங்கள் வரை காலாவதி கெடு உண்டு.

[ஆதாரம்:—1953 (2) மதராஸ் லா ஜர்னல்-181.]

இவ்வழக்கில் ஒரு முக்கியமான பிரச்னை தீர்க்கப்பட்டிருக்கிறது. தம்மிடமிருந்து சட்ட விரோதமாக விற்பனை வரி அதிகாரிகள் ரூ. 900 விற்பனை வரி வசூல் செய்துவிட்டதாயும், அத்தொகை தமக்குத் திரும்பக் கிடைக்கவேண்டுமென்றும் இவ்வழக்கின் வாதி சென்னைச் சர்க்கார்மீது தாவா செய்தார். வாதியிடம் வரி வசூல் செய்யப்பட்டது 27-5-1946ல். வாதி தாவா செய்தது 10-1-1948ல். இத்தாவா காலாவதியாகி விட்டதென்று சர்க்கார் கட்சியாடினர். விற்பனை வரிச் சட்டத்தின் 18ஆவது செக்ஷன்படி இச்சட்டத்தை அனுசரித்தோ, இச்சட்டப்படி செய்வதாக உண்மையில் நினைத்துக்கொண்டோ, சர்க்கார் ஊழியர்கள் எவரும் செய்யும் செய்கைகளைக் குறித்து ஒருவர் சர்க்கார்மீது தாவா செய்ய வேண்டுமானாலும், அல்லது சம்பந்த

சர்க்கார் ஊழியர்மீது தாவாவோ கிரிமினல் நடவடிக்கைகளோ அல்லது வேறு நடவடிக்கைகளோ தொடரவேண்டுமானாலும்- அச்செய்கை நடந்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், மேற்கண்ட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று இருக்கிறது. இந்த ஷரத்தின்படி பிரஸ்தாப வழக்கில், ஆறுமாதங்கள் கழித்துச் செய்யப்பட்டிருக்கும் இத்தாவாவானது காலாவதியாகி விட்டதென்று சர்க்காரின் கட்சி. மேலும் காலாவதிச் சட்டத்தில் ஆர்டிகிள் 16 என்று ஒரு ஷரத்து இருக்கிறது. அதன்படி ரிவின்யூ அதிகாரிகள் கேட்பதின் பேரில் அவர்களிடம் ஆட்சேபணைசெய்து கொடுக்கப்படும் தொகைகளைத் திரும்ப வசூல் செய்ய, தொகை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் சர்க்கார்மீது தாவா செய்ய வேண்டுமென்று இருக்கிறது. இந்த ஷரத்துப்படி பார்த்தாலும் பிரஸ்தாப தாவாவானது காலாவதியாகி விட்டதெனவும் சர்க்கார் கட்சியாடினர்.

இக்கட்சிகளை ஏற்றுக்கொண்டு ஜில்லா முன்சீப் வாதியின் தாவாவைக் காலாவதியாகிவிட்டதென்று முதலெடுப்பிலேயே தள்ளி விட்டார். அதன்பேரில் வாதி சப் கோர்ட்டுக்கு அப்பில் செய்ததில் மேற்கண்ட இரண்டு ஷரத்துக்களும் பிரஸ்தாப தாவாவுக்குப் பொருந்தமாட்டா என்றும், காலாவதிச் சட்டத்தின் ஆர்டிகிள் 62ன் படி, சர்க்காரிடம் விற்பனை வரித் தொகை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் அதைத் திரும்ப வாங்கத் தாவா செய்யலாமெனவும் சப்ஜட்ஜ் தீர்ப்பளித்து, வழக்கின் மற்றக் கட்சிகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும்படி வழக்கை மறுபடியும் முன்சீப் கோர்ட்டுக்கே அனுப்பினர். சப் ஜட்ஜ் செய்த தீர்ப்பின் பேரில் சென்னைச் சர்க்கார் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். ஹைகோர்ட்டில் சப் ஜட்ஜின் தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது.

விற்பனை வரிச் சட்டத்தின் 18ஆவது செக்ஷனில் இருப்பது, சர்க்கார் ஊழியர்களால் செய்யப்படும் குற்றமான செய்கைகளுக்கும் பொருந்துமே ஒழிய வரி வசூல் செய்ததற்குப் பொருந்தாதெனவும்; காலாவதிச் சட்டத்தின் 16-ஆவது ஆர்டிகிளில் இருப்பது நிலவரி சம்பந்தமானதே ஒழிய, பதினைந்து நாட்களுக்குள் கட்டப்பட்ட விற்பனை வரித் தொகைக்குப் பொருந்தாதென்றும்; ஆகையால் காலாவதிச் சட்டத்தில் இருக்கும் ஆர்டிகிள் 62 என்ற ஷரத்துத்தான் பொருந்துமென்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு இத்தாவா காலாவதி ஆகவில்லை எனத் தீர்ப்பளித்தனர்.

காலாவதிச் சட்டத்தின் ஆர்டிகிள் 62 என்பது இதுதான்:—வாதிக்குச் சேரவேண்டிய தொகையாக, பிரதிவாதியிடமிருக்கும் தொகையைப் பிரதிவாதியிடமிருந்து வாதி திருப்பி வாங்க, பிரதிவாதி தொகையைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் தாவா செய்யவேண்டும்- என்று இருக்கிறது.

வெண்சங்கு நறுமண

சீயக்காய்த் தூள்

உ
ஸ்ரீ மகாலக்ஷ்மி துணை

திருக்காட்டுப்பள்ளியில்
பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள

ஸ்ரீ திருச்சி கபே

ஹோட்டலில் கை தேர்ந்த பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும் இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும். டீ பார்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.

சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் — 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

[சென்ற மாத இதழில் பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய கட்டணங்களை வசூல் செய்வதற்குக் காலாவதி பற்றியும், கிரிமினல் வழக்குகளைப் பற்றியும், அவைகளை எப்படி ராஜி செய்து கொள்ளலாமென்பது பற்றியும் பஞ்சாயத்துச் சட்டத்திலும் விதிகளிலும் உள்ள ஷரத்துக்களைக் கவனித்தோம். இனி பஞ்சாயத்து அங்கத்தினர்கள், தலைவர், நிர்வாக அதிகாரி இவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பது பற்றிய சட்ட ஷரத்தையும் மற்ற ஷரத்துக்களையும் கவனிப்போம்.]

பஞ்சாயத்துத் தலைவர் மீதும் மெம்பர் மீதும், நிர்வாக அதிகாரி மீதும் கிரிமினல் வழக்குத் தொடருவதுபற்றி

செக்ஷன் 106

தம்முடைய அதிகார பூர்வமான கடமைகளைச் செய்யும் போது ஒரு பஞ்சாயத்தின் தலைவரோ, நிர்வாக அதிகாரியோ, அல்லது பஞ்சாயத்தின் அங்கத்தினரோ குற்றம் செய்துவிட்டதாக அவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர வேண்டுமானால், அப்படி வழக்குத் தொடர, முன்னதாகவே சர்க்காரின் அனுமதி பெற்றாலொழிய, அவ்விதமான கிரிமினல் வழக்கை எந்தக் கோர்ட்டும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

பஞ்சாயத்தின் மீதோ அல்லது தலைவர், அங்கத்தினர் அல்லது சிப்பந்தி மீதோ நடவடிக்கை எடுக்க இரண்டு மாதம் நோட்டீசு கொடுக்க வேண்டும். ஆறு மாதத்திற்குள் தாவாவும் போடவேண்டும்.

செக்ஷன் 107

(1) இச் சட்டத்தை அனுசரித்தோ அல்லது இச் சட்டத்தை அனுசரிப்பதாக உண்மையில் எண்ணிக் கொண்டோ ஒரு பஞ்சாயத்தின் தலைவரோ, அல்லது நிர்வாக அதிகாரியோ, அங்கத்தினரோ, அல்லது பஞ்சாயத்தின் ஒரு உத்தியோகஸ்தரோ, அல்லது ஊழியரோ, அல்லது மேற்கண்டவர்களின் உத்தரவுப்படி நடக்கும் வேறு ஒரு நபரோ ஏதாவது ஒரு செய்கை செய்தாலும் சரி; அல்லது இச் சட்டப்படியோ விதிகள், உபவிதிகள் ரெகுலேஷன் அல்லது உத்தரவுகளின்படியோ மேற்கண்டவர்கள் மீது கோர்ட்டில் தாவாவோ அல்லது வேறு நடவடிக்கைகளோ செய்யவேண்டுமென்றால் அது விஷயமாக அவர்களுக்கு நோட்டீசு கொடுக்கவேண்டும். நோட்டீஸ் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் முடியும் வரையில் தாவா அல்லது நடவடிக்கை போடவும் முடியாது. நோட்டீசானது பஞ்சாயத்து ஆபீசுக்கும் கொடுக்கப்படவேண்டும்; அல்லது மேற்கண்ட நபர்கள் மீது தாவா அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட நபருக்கும் நோட்டீசு கொடுக்க வேண்டும். நோட்டீசில் கண்டிருக்க வேண்டிய விஷயங்களாவன:—வியாஜ்ய மூலம்; என்ன பரிகாரம் கேட்கப்படுகிறதோ அதன் தன்மை; கேட்கப்படும் நஷ்ட ஈட்டுத் தொகை; தாவா செய்யப்போகும் வாதியின் பெயர் இருப்பிடம்; இவ் விஷயங்கள் கண்டிருக்க வேண்டும். மேற்கண்டபடி நோட்டீஸ் கொடுக்கப்படாவிட்டால் வாதியின் தாவா அல்லது நடவடிக்கை முதலெடுப்பிலேயே தள்ளப்பட்டுவிடும்.

சில சந்தர்ப்பங்களில் மேற்கண்டவர்கள் மீது எவ்வித தாவாவோ நடவடிக்கைகளோ எடுத்துக்

கொள்ளக் கூடாதென்று அவர்களுக்குக் கீழே வரும் செக்ஷன் 108ல் கண்ட ஷரத்துப்படி பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. செக்ஷன் 108ல் கண்ட விஷயங்களுக் குட்பட்டுத்தான் இந்த ஷரத்தில் கண்டபடி தாவா அல்லது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(2) மேற்கண்டவர்கள் மீது ஸ்தாவர சொத்தைத் திரும்ப வாங்கவோ ஸ்தாவர சொத்தின் பாத்தியங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளவோ எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தவிர மற்ற எவ்வித நடவடிக்கைகளும், வியாஜ்ய மூலம் ஏற்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் போடப்பட வேண்டும். வியாஜ்ய மூலம் தொடர்ந்து கொண்டே இருந்தால், அது இருக்கும் போதாவது, அல்லது அது முடிந்த ஆறு மாதத்திற்குள்ளாவது நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

(3) மேலே உட்பிரிவு (1)ன்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்ட பஞ்சாயத்தாலோ, தனி நபராலோ, வாதிக்குச் சேரவேண்டியதாக நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பு ஏதாவது தொகை கொடுக்கப்பட்டு, அதை வாதி ஏற்றுக் கொள்ளாமல் மறுத்து, தாவா செய்து, அத் தாவாவில் அத் தொகைக்கு மேல் வாதிக்குத் தீர்ப்பு ஏற்படாவிட்டால், அத் தாவாவில் வாதிக்கு யாதொரு செலவுத் தொகையும் கிடைக்காது; மேலும் பிரதி வாதியின் செலவுத் தொகைகளை வாதியே கொடுக்க நேரிடும்.

நல்லெண்ணத்துடன் செய்யும் காரியங்களுக்கு பஞ்சாயத்துத் தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு.

பஞ்சாயத்தின் தலைவரோ, நிர்வாக அதிகாரியோ, அங்கத்தினரோ, அல்லது பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தரோ, அல்லது ஊழியரோ, அல்லது மேற்கண்டவர்களின் உத்தரவுப்படி நடப்பவர்களோ, பஞ்சாயத்துச் சட்டப்படிக்கோ, விதிகள், உபவிதிகள், ரெகுலேஷன் அல்லது உத்தரவுகளின்படி நல்லெண்ணத்துடன் உண்மையாகச் செய்யும் காரியங்களைப் பொறுத்தும் சரி, தவறுதல்களைப் பொறுத்தும் சரி; அவர்கள் அவ்விதம் செய்வதாக உண்மையில் எண்ணிக்கொண்டு செய்யும் செய்கைகளையும் தவறுதல்களையும் பொறுத்தும் சரி, அவர்கள் மீது எவரும் எவ்விதமான தாவாவோ நடவடிக்கையோ எடுத்துக்கொள்ள முடியாது. ஏற்றுக் கொள்ளத்தக்க நடவடிக்கைகளையும் கீழே செக்ஷன் 110ல் கண்ட விதிவிலக்குக்குட்பட்டு, பஞ்சாயத்தின்மீதேதான் தொடர வேண்டும்; அதாவது செக்ஷன் 110ல் கண்ட சந்தர்ப்பங்கள் தவிர மற்றப்படி தாவா முதலிய நடவடிக்கைகளைத் தனி நபர்கள் மீது போடாமல் பஞ்சாயத்தின் மீதுதான் போட வேண்டும்.

வாக்காளர் ஜாப்தா தயார் செய்வதையும் தேர்தல்களை நிறுத்தவும் தடை உத்தரவு கிடைக்காது.

செக்ஷன் 109

சிவில் வழக்கு முறைச் சட்டத்திலும் வேறு சட்டங்களிலும் வேறு விதமாக இருந்தபோதிலும் இச் சட்டப்படி வாக்காளர் ஜாப்தா தயார் செய்வதையும், பிரசுரம் செய்வதையும், தேர்தல் சம்பந்தமான ஏற்பாடுகளையும் தடை செய்து எந்தக் கோர்ட்டும் சாசுவத தடை உத்தரவுகளையோ, இடைக்காலத் தடை உத்தரவுகளையோ பிறப்பிக்கக் கூடாது.

பஞ்சாயத்தின் பணத்தையோ சொத்துக்களையோ நஷ்டப் படுத்தினாலும், துர்விநியோகம் செய்தாலும், இழந்தாலும்— தலைவர், நிர்வாக அதிகாரி, அங்கத்தினர்கள் இவர்கள் மீது தாவா செய்து அதை வசூலிக்கலாம்.

(1) பஞ்சாயத்தின் தலைவர், நிர்வாக அதிகாரி அல்லது எந்த அங்கத்தினர் யாருடைய அஜாக்கிரதையாலோ அல்லது தவறுதல் காரணமாகவோ பஞ்சாயத்தின் பணத்திற்கோ, சொத்திற்கோ நஷ்டம் ஏற்பட்டாலும், அவை பாழ் பண்ணப் பட்டாலும், துர்விநியோகம் செய்யப்பட்டாலும், அதனால் ஏற்படும் நஷ்டத் தொகைக்கு அவர் மீது பஞ்சாயத்து தாவா செய்து நஷ்ட ஈடு அடையலாம். இவ்வித

தாவாவைச் செய்வதற்கு முன் பஞ்சாயத் தானது, இன்ஸ்பெக்டருடைய முன் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(2) இவ்விதமான தாவாக்கள் வியாஜ்ய மூலம் ஏற்பட்ட மூன்று வருடங்களுக்குள் போடப்படவேண்டும்.

கைத்தவறுதல்களைப் பற்றிப் பரிகாரம் கேட்க முடியாது.

(1) இச் சட்டப்படி வரி விதிப்பிலோ, டிமாண்டுகளிலோ, வேறு கட்டணங்கள் விதிப்பதிலோ ஒரு பேருடைய பெயர், இருப்பிடம் வியாபார ஸ்தலம் அல்லது தொழிலைப் பற்றியாவது; வரி அல்லது கட்டணத்தொகையைப் பற்றியாவது ஏதாவது கைத்தவறுதல்கள் ஏற்பட்டிருந்தால், அவை பற்றி ஒருவரும் எவ்விதப் பரிகாரமும் தேட முடியாது. இச் சட்ட ஷரத்துக்கள் உண்மையில் பின்பற்றப் பட்டிருந்தால் மேற்கண்ட கைத் தவறுதல்கள் காரணமாகப் பஞ்சாயத்தின் நடவடிக்கைகளை எந்தக் கோர்ட்டும் ரத்துச் செய்யக்கூடாது.

செக்ஷன் 111

(2) இச் சட்ட ஷரத்துக்கள் உண்மையில் பின் பற்றப்பட்டிருந்தால், இச்சட்டப்படி வசூல் செய்யப்பட்ட தொகைகளைத் திரும்பக் கேட்டோ, நஷ்ட ஈடு கேட்டோ எவரும் எந்தக் கோர்ட்டிலும் தாவா தொடர முடியாது.

(3) இச்சட்ட ஷரத்துக்கள் உண்மையில் பின் பற்றப்பட்டிருந்தால், ஒரு பில், நோட்டீசு, ஜாப்தா, மகஜர், சம்மன், டிமாண்டு நோட்டீசு, ஜப்தி, வாரண்டு முதலிய நடவடிக்கைகளில் ஏற்படும் தவறுதல்களைக்கொண்டு, நடவடிக்கை எடுப்பவர் சட்ட விரோதமான செய்கை செய்வதாகவோ, ஜப்தி அல்லது விற்பனையானது சட்ட விரோதமானதென்றோ ஏற்பட்டுவிடாது. ஆனால் அவ்விதத் தவறுதல்களால் விசேஷ துன்பமடைந்த எவரும் நஷ்ட ஈடு பெறலாம்.

(தொடரும்)

சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிறங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி, எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12.
சிறிய ,, ,, ,, அணா 6.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை, S. Ry.

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

ஒரே வீடு மூன்று பாகஸ்தர்களுக்குச் சொந்தம்.

165. **கேள்வி**: (கோதண்டராமன்) — ஒரு இந்துக் குடும்பத்தில் பல வருடங்களுக்கு முன் பாகப் பிரிவினை ஏற்பட்டது. ஒரு வீட்டை மூன்று நபர்கள் சமபாகமாகப் பிரித்துக் கொண்டனர். முன் பாகம் ஒருவருக்கு; நடுப்பாகம் ஒருவருக்கு; கடைசிப் பாகம் ஒருவருக்கு. இப்போது நடுப்பாகஸ்தர் தம் பாகத்தைப் பிரித்து விடலாமா? பிரித்தால் மற்ற இரண்டு பாகஸ்தர்களுக்கும் சேதமுண்டாகிறது. இதைத் தடுக்க முடியுமா? எப்படி?

பதில்: ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பாகப் பிரிவினையில் இது விஷயமாக ஏதாவது ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருந்தாலொழிய, நடுப்பாகஸ்தர் தமக்குப் பிரத்தியேகச் சொந்தமான இடத்தை இடித்து விடச் சட்டத்தில் யாதொரு தடையுமில்லை. ஆனால் தம்முடைய பாகத்தை அவர் இடிக்கும்போது மற்றப் பாகஸ்தர்களுடைய கட்டடத்திற்குச் சேதமுண்டாக்காமல்தான் இடிக்கவேண்டும். மற்றப் பாகஸ்தருடைய கட்டடத்திற்கும் சேதமுண்டாகும்போல் இருந்தால் அதைக் கோர்ட் மூலம் தடைசெய்து விடலாம்.

முஸ்லீம் மத ஸ்தாபனத்தைப் பற்றிய கணக்கு வழக்குகள்.

166. **கேள்வி**: (மாக் சாஹிப்—மேட்டுப் பாளையம்.) ஒரு பெரிய பள்ளி வாசலுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 3000 வருவாய். இதன் நிர்வாகக் கமிட்டியில் சில மெம்பர்களும் ஒரு தலைவரும் உண்டு. கடந்த பல வருடங்களாகப் பொதுஜனங்கள் பார்வைக்கு வருடாந்தர வரவு செலவுக் கணக்குகள் காண்பிக்கப்படவில்லை. பொது மக்கள் கணக்குகளைப் பார்க்கவும் சொத்துப் பராதீன மாகாமல் தடுக்கவும் எந்த முறையைக் கையாளலாம்?

பதில்: இந்து மத தர்ம பரிபாலனச் சட்டத்தைப்போல் முஸ்லீம் மத ஸ்தாபனங்களைப்பற்றிப் பிரத்தியேகமான சட்டம் ஒன்று இல்லை. இல்லாவிட்டாலும் 1863-ம் வருடத்திய 20-ஆவது மத்திய சட்டம் ஒன்று இருக்கிறது. மத ஸ்தாபனச் சட்டம் (The Religious Endowment Act) இச்சட்ட ஷரத்துக்களின்படி அப் பள்ளி வாசலில் அக்கரையுள்ள எவரும் ஜில்லா கோர்ட்டுக்கு மனுக் கொடுத்து முதலில் நிர்வாகஸ்தர்களைக் கணக்கு வழக்குகளைத் தாகல் செய்யும்படி கேட்டு, பிறகு தேவையானால் தக்க பரிகாரங்

களுக்கு அச்சட்டத்தின்செக்ஷன் 14-ன்படி தாவாவும் செய்யலாம்.

தகப்பனால் கொடுக்கப்பட்ட சொத்து.

167. கேள்வி: (ரெங்கசாமி நாடார்—நஞ்சுண்டபுரம்) ஒரு இந்து சுயமாகச் சம்பாதித்த சொத்தை மூன்றுபாகமாகப் பிரித்து தம்முடைய மூன்று ஆண் மக்களுக்கும் எழுதிவைத்தார். அதில் மூன்றுவது மகன் அடையும் சொத்துக்களை அவர் விற்கவும் அடமானம் செய்யவும் கூடாதென்றும் அவருக்குப் பின் அவருடைய வார்சுகள் அடையவேண்டியதென்றும் எழுதி வைத்திருக்கிறர். அம்மூன்றுவது மகன் இறந்துவிட்டார். ஆண் குழந்தை இல்லை. மூன்று பெண்கள் மட்டும் உண்டு. மனைவியும் உண்டு. சொத்துக்கு வார்சுகள் யார்?

பதில்: மூன்றுவது மகன் இறந்த பிறகு அவருடைய சொத்துக்களை அவருடைய மனைவியே அடைவாள்.

ஒருவரை ஒருவர் விரும்பாத கிறிஸ்துவ தம்பதிகள்—விவாக ரத்துச் செய்துகொள்ள முடியுமா?

168. கேள்வி: (L 747 பிரகாரம்–நாகை) ரோமன் கத்தோலிக் கிறிஸ்துவமதத்தைச் சேர்ந்த ஒரு சதிபதிகள் கலியாணம்செய்துகொண்டதிலிருந்தே இல்வாழ்ச்சையில் ஈடுபடாமல் கடந்த ஆறு வருடங்களாகத் தனித்து வாழ்கின்றனர். ஒருவரை ஒருவர் விரும்பவில்லை. இதில் யார் விவாகரத்துக் கோரமுடியும்?

பதில்: விவாகம் செய்துகொண்டுவிட்ட தம்பதிகள் ஒருவரை ஒருவர் விரும்பாமல் இருப்பது, விவாக ரத்துக் செய்துகொள்ளப் போதுமான காரணமாகாது. (கிறிஸ்துவ விவாக ரத்துச் சட்டம்—The Divorce Act 1869.)

வளர்ப்புப் பிள்ளை.

169. கேள்வி: (முனிசாமி ரெட்டியார்—திருவள்ளூர்—P. Q. 753) ஐந்து இந்து சகோதரர்கள் பாகப் பிரிவினை செய்துகொண்டார்கள். ஒருவருக்குச் சந்ததி இல்லை. பங்காளியின் மகன் ஒருவனை அவர் வளர்ப்புப் பிள்ளையாக வளர்த்து வந்தார். சுவீகாரப் பத்திரம் எழுதவில்லை. அவர் இறந்துவிட்டார். இப்போது அவருடைய மனைவியும் சுவீகாரப் புத்திரன் என்று சொல்லப்படுபவனும் சொத்துக்களை அனுபவித்து வருகிறர்கள். இறந்தவருடைய சொத்துக்களில் மனைவிக்கு என்ன பாத்தியம்? அவள் சொத்துக்களைப் பராதீனம் செய்ய முடியுமா? அவளுக்குப் பின் வார்சு யார்? அவள் இப்போது ஒரு பத்திரம் எழுதி, சுவீகாரத்தை ஊர்ஜிதம் செய்ய முடியுமா? அப்படிச் செய்தால் சுவீகார மகனுக்கு உரிமை வருமா? பங்காளிகள் ஆட்சேபிக்க இடமுண்டா?

பதில்; இறந்தவருடைய சொத்துக்கு மனைவி மட்டில்தான் வார்சு. சுவீகாரம் எடுத்துச் கொள்ளப்படாமல் வளர்ப்புப் பிள்ளையாக மட்டில் இருப்பவருக்கு 'மகன்' என்ற அந்தஸ்துக் கிடையாது. சுவீகாரம் என்று சட்டப்படி எடுத்துக் கொள்ளுவதுதான் முக்கியமே ஒழிய, சுவீகாரப்பத்திரம் என்பது அத்தியாவசியமானதல்ல. எடுத்துக்கொள்ளப்படாத சுவீகாரத்தை மனைவியானவள் ஒரு பத்திரம் எழுதுவதின் மூலம் ஊர்ஜிதம் செய்ய முடியாது. ஆனல் அவளே இந்துச் சட்டப்படி 'சுவீகாரம்' எடுத்துக் கொள்ளலாம். அதைப் பங்காளிகள் ஆட்சேபிக்க முடியாது.

லைசென்சு கிடைக்கு முன் அரிசி வியாபாரம் ஆரம்பிக்கலாமா?

170. கேள்வி: (S. R. கிருஷ்ணன்—கோவை) அரிசி வியாபாரம் புதிதாகச் செய்யப் பணம் கட்டி மூன்று மாதமாகியும் லைசென்சு கொடுக்கப்படாவிட்டால், அரிசி வியாபாரம் செய்யலாமா, கூடாதா?

பதில்: கூடாது. லைசென்சு கொடுக்கப்பட்டால்தான் ஆரம்பிக்கலாம்.

ஸ்திரீக்குப் போக்கியம் தள்ளுபடி உண்டா?

171. கேள்வி: (S. கோவிந்தசாமி—புளிச்சப்பள்ளம்.) வேறு சொத்து ஒன்றுமில்லாத ஒரு ஸ்திரீ 29–4–1946ல் ஒரு நிலத்தின் பேரில் ரூ. 900க்கு ஒரு போக்கியம் வாங்கி இருக்கிறள். இந்தப் போக்கியத்திற்கு விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி, அசல் தொகையில் தள்ளுபடி உண்டா?

பதில்: தள்ளுபடி உண்டு. இவ்விஷயத்தில் ஸ்திரீகளுக்கு யாதொரு சலுகையும் இல்லை. ரூ. 6000க்கு மேற்பட்டு, சொத்து இல்லாத ஸ்திரீ ஒருத்திக்கு 1-10-1937 தேதியில் கிடைக்க வேண்டியதாக இருக்கும் அசல் வட்டித் தொகைகளில்தான் யாதொரு தள்ளுபடியும் கிடையாது. (சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்—செக்ஷன் 4 (h) பார்க்கவும்.) அத்தேதிக்குப் பின் கடன் கொடுக்கும் ஸ்திரீகளுக்கு அச்சட்டத்தில் விதிவிலக்கு ஒன்றுமில்லை.

இந்து விதவை சொத்தைப் பராதீனம் செய்வதும் சுவீகாரம் எடுப்பதும்.

172. **கேள்வி:** (சிவசங்கரன்—மாயூரம்.) இந்துக் கணவன் இறந்தபின், அவருடைய சொத்துக்களை வார்சு முறைமையில் மனைவி அடைந்து, அனுபவித்து வருகிருள். ஜீவனத்திற்குப் போதுமான வரும்படியுள்ள சொத்துக்கள். அவள் அச்சொத்துக்களைக் கிரயம், அடமானம், போக்கியம், சுவீகாரம் எடுத்துக் கொள்ளுதல், முதலிய யாதொரு பராதீனமும் செய்யாமல் தடைப்படுத்தச் சட்டப்படி இடமுண்டா? இடமிருந்தால் எவ்விதம் தடை விதிக்கலாம்?

பதில்: இந்துக் கணவன் இறந்தபின் அவருடைய வார்சு முறைமையில் சொத்துக்களை அடைந்த அவருடைய மனைவியானவள் சாதாரணமாய் அவற்றின் வருமானத்தை மட்டில், தன் ஆயுள்வரை அடைந்து அனுபவிக்கலாம். இருந்தாலும் சில விசேஷ சந்தர்ப்பங்களில், அதாவது சட்டப்படி அவசியமோ நெருக்கடியோ ஏற்படும் சமயத்தில், அவள் அச்சொத்தையே விற்றுவிடலாம்; அல்லது வேறு தேவையான பராதீனங்களும் செய்யலாம். தன்னுடைய ஜீவனத்தைத் தவிர வேறு அவசியமான செலவுகளும் ஏற்படலாம். உதாரணமாக, தன் கணவனால் ஏற்பட்ட கடன்கள்; நிலங்களைப்பற்றிய விவகாரங்கள் போன்ற செலவுகளுக்காகவும் அவள் சொத்தையே விற்றுவிடலாம். சட்டம் இப்படி இருக்கும்போது, ஒரு விதவையானவள் சொத்தை விற்றுவிட்டால், அவள் ஆயுள் உள்ளவரை அக்கிரய சாசனம் எப்படியும் செல்லும். அவள் இறந்தபின் வரக் கூடிய அனந்தர வார்சுகளை, அவள் விற்றது கட்டுப்படுத்துமா கட்டுப்படுத்தாதா—என்ற பிரச்னைதான் எழும். அனந்தர வார்சுகளுக்கு இரண்டு விதப் பரிகாரங்கள் தேடிக் கொள்ள உரிமை உண்டு. (1) விதவை இறந்தபின் சொத்துக்கள், விற்ற சொத்துக்கள் உள்பட, தம்முடைய சுவாதீனத்திற்கு வரவேண்டுமென்று அனந்தர வார்சுகள் தாவா செய்யலாம். அவசியமில்லாமல் விதவை கிரயம் செய்திருந்தால் அனந்தர வார்சுக்கு சொத்துக் கிடைக்கும். (2) விதவை உயிருடனிருக்கும்போதே, அவள் செய்த கிரயமானது அவருடைய ஆயுளுக்குப் பின் செல்லாதென இப்போதே தீர்மானம் செய்யவேண்டுமென்றும் அடுத்த அனந்தர வார்சுகள் தாவா செய்யலாம். அவசியமில்லாமல் விதவை கிரயம் செய்திருந்தால், அது அனந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்தாதெனக் கோர்ட்டால் பிரகடனம் (Declare) செய்யப்படும். அவசியமில்லாமல் ரொக்கம் ஜங்கமம் போன்ற சொத்துக்களை விரயம் செய்யாமல் தடை உத்தரவும் வாங்கலாம்.

சுவீகாரம் செய்து கொள்ளுவது என்பது சொத்தைப் பராதீனம் செய்வதற்குச் சமமாகக் கேள்வியில் கேட்கப்பட்டிருப்பது சரி அல்ல. இந்துச் சட்டப்படி சில விதிகளை அனுசரித்து விதவையானவள் சுவீகாரம் செய்துகொள்ளலாம். அதைத் தடுக்க முடியாது. ஆனால் அவள் எடுத்துக் கொண்ட சுவீகாரமானது செல்லாதென 'டிக்ளரேஷன்' தாவா செய்யவும் அனந்தர வார்சுகளுக்கு உரிமை உண்டு. சட்டப்படிக்கான சுவீகாரத்தால், அனந்தர வார்சுகளுக்குச் சொத்துக் கிடைக்காமல் போய்விட்டாலும் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது.

உயில் ஷரத்துக்கள்.

173. **கேள்வி:** (பத்மநாபன்—சிதம்பரம்) இரண்டு மனைவியுள்ள இந்து ஒருவர், ஒரு உயில் ஏற்படுத்தினர். அதில் தமது நஞ்சை புஞ்சை முழுமையும் தமது ஆயுளுக்குப் பின் இளைய மனைவிக்கே சர்வ சுதந்தரமாய்க் கொடுத்துவிட்டார்.

சொத்து விபரத்தில் கொஞ்ச நிலங்களின் நம்பர் அளவு குறிக்கப்படாமல் ஞாபக மறதியாக விடுபட்டு விட்டது. விடுபட்ட சொத்து யாருக்கு உரிமை?

பதில்: இது உயிலின் வாசகத்தைப் பொறுத்துச் சொல்லப்பட வேண்டும். உயிலில் சொத்து விபரம் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. 'என்னுடைய யாவத்து நஞ்சை புஞ்சை நிலங்களையும் என்னுடைய இளைய மனைவி அடைகிறது'—என்று கண்டிருந்தாலே போதும். அவள் எல்லாச் சொத்துக்களையும் அடைவாள். அப்படிக்கில்லாமல் குறிப்பாகச் சர்வே நம்பர் கண்ட சொத்துக்களை அவள் அடையும்படி கண்டிருந்தால், எக்காரணத்தாலோ விட்டுப்போன சொத்துக்களை இரண்டு மனைவிகளும் வார்சு முறைமையில் சமபாகமாகவே அடைவார்கள்.

தஞ்சைச் சட்டம்.

174. **கேள்வி:** (முத்துக்கண்ணுப் பிள்ளை—திருத்துறைப்பூண்டி) தஞ்சைச் சட்டப்படி—அறுவடைக் காலத்தில் வேலைக்கு வராத பண்ணை ஆளுக்கு இரண்டு மரக்கால் பிடித்தம் என்று இருக்கிறது. சாகுபடிக் காலத்தில் வராத பண்ணை ஆளுக்கு என்ன பிடித்தம் செய்யவேண்டும்?

பதில்: சாகுபடிக் காலத்தில் வேலைக்கு வந்த நாட்களுக்குத்தான் கூலி கொடுக்க வேண்டுமென்று தஞ்சைச் சட்டத்தில் இருப்பதால்—வராத நாட்களுக்குக் கூலி கொடுக்கவேண்டியதில்லை என்பது தவிர, அதிகப்படியான பிடித்தம் செய்வது கூடாது.

அச்சாபீசு வேலைகளுக்கு விற்பனை வரி.

175. **கேள்வி:** (வெங்கடசுப்ரமணியம்—மாயூரம்.) அச்சாபீசுகள் சம்பந்தப்பட்ட வரையில் அச்சுவேலைகளுக்கு விற்பனை வரி விதிப்பதில் 'ஒப்பந்தவேலை' (Works Contract) விதிப்படி 30% தள்ளுபடி உண்டா?

பதில்: விற்பனை வரி டர்ன்ஓவர் விதி 4 (3) (f) ஷரத்துப்படி 30 சதவிகிதம் தள்ளுபடி உண்டு.

சீதனச் சொத்துக்கள்

176. **கேள்வி:** (பெருமாள் உடையார்) ஒரு இந்து ஸ்திரீக்குச் சீதன நிலங்கள் உண்டு. அவள் அந்நிலங்களைத் தன் ஆயுள் உள்ளபோதே விற்றுப் பணமாக வைத்திருந்தால் அவள் இறந்த பிறகு அதற்கு வார்சு அவனுடைய ஆண் மக்களா, பெண்மக்களா?

பதில்: சீதனச் சொத்துக்குப் பெண் மக்கள்தான் வார்சுகள்.

பஞ்சாயத்துக் கோர்ட்டின் அதிகாரம்.

177. **கேள்வி:** (அரவமுத்து — உத்தரமேரூர்.) *1950*-ஆம் வருடத்திய சென்னைப் பஞ்சாயத்துச் சட்டப்படி அமைக்கப்பட்ட மேஜர் பஞ்சாயத்துக்கு ரூ. 100 வரை மதிப்புள்ள வழக்குகளை விசாரித்து முடிவு செய்ய அதிகாரம் இருக்கிறதா?

பதில்: *1950*-ஆம் வருடத்திய கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 132 (4) (d)படி ரூ. 100க்கு அதிகப்படாத மதிப்புள்ள வழக்குகளை அப்பஞ்சாயத்துக்களே 'பஞ்சாயத்துக் கோர்ட்டு' என்ற முறையில் விசாரிக்க அதிகாரம் உண்டு.

பஞ்சாயத்திலிருக்கும் வீட்டின்மீது அடமானம். வட்டி தள்ளுபடி உண்டா?

178. **கேள்வி:** (கிருஷ்ணசாஸ்திரி—மதராஸ்.) 6-1-1937ல் ஒரு அடமானப் பத்திரம் ஏற்பட்டது. கடன் வாங்கியவருக்குப் பஞ்சாயத்து உள்ள ஊரில் ஒரு வீடும் நிலமும் இருக்கின்றன. வீட்டின் மீது மாத்திரம்தான் அடமானம். கடன் கொடுத்தவரும் கடன் வாங்கியவரும் லேவாதேவி தொழில் செய்பவர்களல்ல. இந்த அடமானத்திற்குச் சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை உபயோகப்படுத்த முடியுமா? வட்டி நிபந்தனைகளும் வட்டிக்கு வட்டி நிபந்தனைகளும் செல்லுமா?

பதில்: அடமான வீடு உள்ள பஞ்சாயத்தானது, 26-8-1930க்கு முன்பு ஒரு 'யூனியன்' ஆக இருந்திருந்தால்—அந்த அடமானத்திற்குச் சென்னை விவ

சாயிகள் கடன் நிவாரணச் சட்ட ஷரத்துக்கள் கிடையாது. அதாவது அசல் வட்டி ஒன்றிலும் தள்ளுபடி எதுவும் கிடையாது. (சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் செக்ஷன் 4 (d) ஆனால் அப்பஞ்சாயத்தானது அத்தேதிக்கு முன்பு யூனியனுக இல்லாமலிருந்தால் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி வட்டி குறையும். 22-3-1938 வரையில் 5% வட்டி. பிறகு $6\frac{1}{4}$% வட்டி. அதற்கு மேல் உள்ள வட்டியும் வட்டிக்கு வட்டியும் செல்லாது.

'கரண்டில்' ஓடும் செக்கு நாட்டுச் செக்கு ஆகுமா?

179. **கேள்வி:** (வெங்கடாசலம் செட்டி-சிங்கம்புரணி.) நாட்டு மரச் செக்குக்கு மர உலக்கைபோட்டு 'கரண்டில்' ஓட்டினுல் அதற்கு விற்பனை வரி உண்டா?

பதில்: 'கரண்டி'ல் ஓடுவது நாட்டுச் செக்கு ஆகாது. இவ்விதமான செக்குகளில் உற்பத்தியாகும் எண்ணெய் முதலிய சரக்குகளுக்கு விற்பனை வரி விதிவிலக்கு பொருந்தாது.

பழைய வரியும், புதிய பஞ்சாயத்துப் பிரசிடெண்டும்.

180. **கேள்வி:** (ஷேக்காலி ஸாஹிப் — பார்கடாபாட்) தற்சமயம் பஞ்சாயத்துத் தேர்தல் நடப்பதற்கு முன் இருந்த பஞ்சாயத்துப் பிரசிடெண்ட் விதித்த வரியைப் புதிதாக வந்த பிரசிடெண்ட் வசூல் செய்து வருகிறுர். ஆனால் வரி அதிகமாகப் போட்டிருப்பதை அவரும் ஒத்துக்கொள்ளுகிறுர். இந்த வரியைக் குறைக்கப் புதிய பிரசிடெண்டுக்கு அதிகாரம் உண்டா? இல்லாவிட்டால் யாருக்கு எழுதுவது?

பதில்: பஞ்சாயத்தில் வரி விதிப்பது பிரசிடெண்டுகளின் சொந்த அபிப்பிராயத்தையும், அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களேயும் பொறுத்தது அல்ல. வரி சம்பந்தமாக விதிகள் இருக்கின்றன. அவற்றை அனுசரித்து வரி விகிதங்களேப் பஞ்சாயத்துக்கள் நிர்ணயம் செய்யவேண்டும். பஞ்சாயத்தே இஷ்டப்பட்டால் விதிகளை அனுசரித்து வரி விகிதங்களைக் குறைத்துக் கொள்ளலாம். ("வக்கீல்", 1952 டிசம்பர் இதழ் பார்க்கவும்.)

30-9-1947க்கு முன் ஏற்பட்ட போக்கியம்.

181. **கேள்வி:** (கோவிந்தசாமி — புளிச்சப்பள்ளம்.) 27-6-1947ல் ரூ. 400க்கு ஏற்பட்டிருக்கும் போக்கியப் பத்திரத்திற்குக் கடன் நிவாரணச் சட்டப்படி தள்ளுபடி உண்டா, இல்லையா?

பதில்: தள்ளுபடி உண்டு. 30-9-47க்கு முன் ஏற்பட்ட போக்கியங்களுக்குத் தள்ளுபடி அளிக்கும் செக்ஷன் 9 A பொருந்தும்.

ஊறுகாய் தயார் செய்து விற்க லைசென்சு வேண்டுமா?

182. **கேள்வி:** நடராஜ நாடார் கும்பகோணம்) ஊறுகாய் தயாரித்து வியாபாரம் செய்வதற்கு லைசென்சு வாங்க வேண்டுமா? யாருக்கு மனுப்போட வேண்டும்?

பதில்: 30-6-1948ல் மத்திய சர்க்காரால் 'பழச் சரக்குகள் உத்தரவு' (The Fruit Products Order 1948) என்ற ஒரு கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அது ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது. இந்த உத்தரவின் 2 (d) (vii) ஷரத்துப்படி ஊறுகாய்களும் பழச் சரக்குகளாகும். வியாபாரத்திற்காக ஊறுகாய் தயாரிக்க இவ்வுத்தரவின்படி லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். லைசென்சு கொடுக்க ராஜ்ய சர்க்காருக்கே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவில் கண்ட சுகாதார முறைப்படி தான் ஊறுகாய்கள் தயார் செய்து விற்கவேண்டும்.

'லைப்ரரி'க்கு 'கிராண்டு' வாங்குவது எப்படி?

183. **கேள்வி:** (வள்ளுவர் படிப்பகம்—லால்பேட்டை) நூல் நிலையம் (லைப்ரரி) சம்பந்தமாகச் சர்க்கார் 'கிராண்டு' பெற வேண்டுமானால் யாருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்?

பதில்: 'லைப்ரரி' அல்லது நூல் நிலையங்களுக்குச் சர்க்கார் 'கிராண்டு'

கிடைக்கச் சென்னை 'டைரெக்டர் ஆப் பப்ளிக் லைப்ரரீஸ்' (Director of Public Libraries) என்ற அதிகாரிக்கு மனுப் போடவேண்டும். 'டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்' (Director of Public Instruction) என்ற அதிகாரியே தான் லைப்ரரிகளுக்கும் டைரெக்டர் (குறிப்பு:—சென்னை லைப்ரரிச் சட்டம் எனப்படும் பொது நூல் நிலையச் சட்டம் என்பது 1948-ஆம் வருடத்திய 24-ஆவது சென்னைச் சட்டம். இச்சட்ட விதிகள் 14-3-1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I-B பக்கம் 19ல் பிரசுரம் செய்யப் பட்டிருக்கின்றன. விதி 18ல் நூல் நிலையங்கள் எப்படி இருந்தால், சர்க்கார் கிராண்டு கிடைக்கும் என்பது பற்றிய விதிகள் இருக்கின்றன. அவற்றையும் 3-6-1953 தேதி கெஜட்டில் ரூல் சப்ளிமெண்ட் பாகம் IB பக்கம் 25ல் இருக்கும் புதிய விதியையும் கவனித்து, 'லைப்ரரி'கள் சர்க்கார் கிராண்டுக்கு மனுப்போட வேண்டும்.)

தாய் தகப்பனற்ற இந்து மைனருக்குக் கார்டியன் நியமிப்பது எப்படி?

184. **கேள்வி:** (விஜயராகவன்—பார்வதிபுரம்.) தாய் தகப்பனில்லாத இந்து மைனர்கள் அத்தை வீட்டில் ஐந்து வருடமாக வசித்து வருகிறார்கள். ஷை மைனர்களுக்குச் சொத்துக்கள் இருக்கின்றன. ஷை மைனர்களுக்கு இரண்டு சகோதரிகள். மூத்த சகோதரிக்கு விவாகமாகிவிட்டது. மைனர்களுக்குச் சட்டப்படி கார்டியன் ஏற்படுத்தும்படி மைனர்களின் அத்தை புருடன் கோர்ட்டில் மனுக்கொடுத்தால், கார்டியன் நியமிக்கச் சட்டம் இருக்கிறதா? மைனர்களின் மேஜரான சகோதரியின் சம்மதம் இருந்தால் போதுமா?

பதில்: 'கார்டியன் அண்டு வார்டு'ச் சட்டப்படி மைனர்களுக்குக் கார்டியன் நியமிக்கப்பட வேண்டுமென்று அத்தை புருடன் ஜில்லாக் கோர்ட்டில் மனுக் கொடுக்கலாம். மைனர்களின் சகோதரியின் விருப்பத்தையும் கோர்ட்டுக்குத் தெரிவிக்கலாம். ஆனால், எல்லா விஷயங்களையும் யோஜித்து யாரை வேண்டுமானாலும் மைனர்களுக்குக் கார்டியனாக நியமிக்க ஜில்லா கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

185. **கேள்வி:** (தன் ஜீதுவாரகதாஸ்—கோயமுத்தூர்.) பம்பாயில் எண்ணெய் மில் வைத்திருக்கும் ஒருவர், பொள்ளாச்சியில் தம் சொந்த ஆள் வைத்து நிலக் கடலை வாங்கி பம்பாய்க்கு அனுப்பினால், அந்தச் சரக்குகளுக்கு விற்பனை வரி எவ்விடத்தில் யார் கட்டவேண்டும்?

பதில்: நிலக்கடலை வாங்கியவர் சென்னை ராஜ்யத்தில் விற்பனை வரி செலுத்த வேண்டும்.

இந்தியப் பிரஜை, மலாயா பிரஜையாகப் பதிவுசெய்து கொண்டால்

186. **கேள்வி:** (வெ. நாகய்யா—கிளாங், ஜொஹோர்) இந்தியப் பிரஜையாக இருந்த ஒருவர், மலாயாப் பிரஜையாக பிரஜாப்சத்திரம் எடுத்தால், இந்தியாவில் வியாபாரம் செய்யவோ, நிலம் வாங்கவோ, விற்கவோ உரிமை உண்டா? மேலும் அவருக்கு 'வோட்' உரிமை தவிர, வேறு என்ன உரிமை பாதிக்கப்படும்? இந்தியாவில் வெளி நாட்டுப் பிரஜைகளுக்கு என்ன விதிவிலக்குகள் உண்டு?

பதில்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 9 என்ற ஷரத்தின்படி, இந்தியப் பிரஜை ஒருவர் தாமாக அயல் நாட்டின் பிரஜையாக மாற்றிக் கொண்டால் அவருக்கு 'இந்தியப் பிரஜை' (Citizen of India) என்ற அந்தஸ்து போய்விடுகிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்தியப் பிரஜைகளுக்குத்தான் "வோட்டு" உரிமை உண்டு. அயல் நாட்டுப் பிரஜைகளும் இந்தியாவில் வியாபாரம் செய்யலாம்; நிலம் வாங்கி விற்கலாம். அதற்கு இப்போது தடை ஒன்றுமில்லை. ஆனால் அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தியப் பிரஜைகளுக்குச் சில ஜீவாதார உரிமைகள் உண்டு. உதாரணமாக, ஆர்டிகில் 19 என்ற ஷரத்தில் சில ஜீவாதார உரிமைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பேச்சுச் சுதந்தரம்; கூட்டம் கூடும் சுதந்தரம்;

சங்கம் அமைத்துக் கொள்ளும் சுதந்தரம்; இந்தியா எங்கும் போய்வரச் சுதந்தரம்; இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் வசிக்கும் சுதந்தரம்; சொத்து வாங்கவும், வைத்துக்கொள்ளவும் பராதீனம் செய்யவும் சுதந்தரம்; எவ்விதமான தொழிலும் செய்ய சுதந்தரம்—இந்த ஜீவாதார உரிமைகள் எல்லாம் இந்தியப்பிரஜைகளுக்குத் தான் உண்டு. அதாவது சில விதி விலக்குகளுக்கு உட்பட்டு இந்தியப் பிரஜைகள் சம்பந்தப்பட்ட வரையில் இந்த ஜீவாதார உரிமைகளைப் பாதிக்கும் சட்ட திட்டங்களே செல்ல மாட்டா. ஆனால் இந்திய பிரஜை அல்லாதவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்த உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்கள் ஏற்பட்டால் அவற்றை அவர்கள் ஆட்சேபிக்க முடியாது.

மேலும் சில பொறுப்பு வாய்ந்த அரசாங்கப் பதவிகளுக்கு இந்தியப் பிரஜைகள் தான் நியமிக்கப்படவேண்டுமென்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. இந்திய ஜனாதிபதி, உபஜனாதிபதி, பார்லிமெண்டு சட்டசபை அங்கத்தினர்கள், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், ஹைகோர்ட் நீதிபதிகள் இவர்கள் எல்லாம் இந்தியப் பிரஜைகளாகவே இருத்தல் வேண்டும்.

அக்கப்போர் வழக்குகளை எப்பொழுதும் போட்டுக் கொண்டே இருப்பவரை என்ன செய்வது?

187. கேள்வி: *(L. 1061)* ஒரு நபர் பல பேரையும் மனக்கிலேசம் உண்டாக்கக் கூடிய கேசுகளைச் சதா கோர்ட்டில் போட்டுக்கொண்டிருந்தால், ஷெ நபரை எந்தச் சட்டத்தின்படி என்ன செய்ய முடியும்?

பதில்: 'வீண் வியாஜ்யத் தடைச் சட்டம்' (The Vexatious Litigation Prevention Act *1949*) என்று ஒரு சென்னைச் சட்டம் இருக்கிறது. தகுந்த காரணங்கள் இல்லாமல், வழக்கமாய் ஒருவர் சிவில் அல்லது கிரிமினல் கோர்ட்டுக்களில் வீண் நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டே இருந்தால், அவர் அப்படிச் செய்து வருகிறார் என்று இச் சட்டப்படி சென்னை அட்வகேட் ஜெனரல் ஹைகோர்ட்டில் மனுப் போடலாம். ஹைகோர்ட்டார் அந்த நபருக்கு நோட்டீசு அனுப்பி அவருடைய கக்ஷியைக் கேட்டு அவர் அப்படி வீண் வியாஜ்யங்களில் சதா ஈடு படுபவர்தான் என்று தோன்றினால், அவர் ஹைகோர்ட்டின் உத்தரவு இல்லாமல் சென்னையிலும், அந்தந்த ஜில்லா ஜட்ஜின் உத்தரவு இல்லாமல் மற்ற இடங்களிலும், சிவில் கிரிமினல் விவகாரங்கள் தொடரக் கூடாதென்று உத்தரவு செய்யலாம். அவ்வித அனுமதி இல்லாமல் அந்நபர் தொடுக்கும் தாவாக்கள் முதலெடுப்பிலேயே தள்ளப்படும். அவர் கொடுக்க உத்தேசித்திருக்கும் விவகாரத்திற்குத் தகுந்த ஆதாரங்களிருந்தால்தான் மேற்கண்டபடி அனுமதி கொடுக்கப்படும்.

இச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி சென்னை அட்வகேட் ஜனரல் அவர்களுக்கு மனுச்செய்து கொள்ளலாம்.

சென்னையில் ஹைகோர்ட் அதிகாரிகளின்மீதும் நீதிபதிகளின் மீதும்கூட ஒருவர் வீண் வழக்குகள் போட்டுக்கொண்டிருக்கிறார் என்று *15-3-1951*ல் அவர்மீது இச்சட்டப்படி சென்னை ஹைகோர்ட்டார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

தவறிவிட்ட தபால்களும் மணியார்டர்களும்

188. கேள்வி: (பெருமாள் உடையார்—புதுப்பட்டி) புக்போஸ்ட்டோ, மணியார்டரோ அல்லது வேறு தபாலோ தவறி விட்டால், போஸ்ட் ஆபீசுக்கு ரிபோர்ட்செய்து அதைக் கண்டு கொள்வது எப்படி?

பதில்: அந்த ஜில்லாவுக்கான போஸ்டாபீசு சூப்பிரன்டெண்டெண்டு (Superintendent of Post Offices) என்ற அதிகாரிக்கு எழுதவேண்டும்.

இஸ்லாமியச் சட்டம். 'மஹர்' தொகையைப் புருடனிடத்தில் வசூலிக்க முடியுமா?

189. கேள்வி: *(L 1218)* ஒரு முஸ்லீம் பெண் இஸ்லாமியச் சட்டப்படி 'நிகாஹ்'

செய்துகொண்ட புருஷனிடத்தில் வட்டியுடன் 'மஹர்' வசூலிக்க முடியுமா?

பதில்: சென்னை சம்பந்தப்பட்ட வரையில் 'மஹர்' தொகையை புருடனிடமிருந்தே கேட்டு வசூலிக்க முடியும். (முல்லா—இஸ்லாமியச் சட்டம்—அத்தியாயம் 15. 23 மதராஸ் 371 என்ற வழக்கு மனைவியானவன் கணவன்மீது மஹருக்காகப் போடப்பட்ட வழக்கு. ஜாடா மஹர் தொகைக்கும் தீர்ப்பு ஏற்பட்டது.)

துப்பாக்கி லைசென்சுதாரின் வார்சு— துப்பாக்கியை வைத்திருக்கலாமா?

190. **கேள்வி:** (சுப்ரமணியன் — காவேரிபுரம்) ஒரு துப்பாக்கி லைசென்சு உடையவர் இறந்து விட்டால், வார்சுதார் லைசென்சு பெற்று, துப்பாக்கியைப் பெற உரிமை உண்டா? லைசென்சு பெறும் வரை துப்பாக்கியை வார்சு வைத்திருக்கலாமா?

பதில்: 'லைசென்சு' என்பது குறிப்பிட்ட நபருக்கு அளிக்கப்படும் சலுகை. இதில் வார்சுபாத்தியம் கிடையாது. துப்பாக்கி லைசென்சு உடையவர் இறந்து விட்டவுடன் லைசென்சும் தீர்ந்து விடுகிறது. அத்துப்பாக்கியை வைத்திருக்கும் வார்சு அதை உடனே கால தாமதமில்லாமல் சமீபத்திலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்துவிட வேண்டும் (ஆயுதச் சட்டம் செக்ஷன்–16.) வார்சானவர் தம்முடைய சொந்த யோக்கியதாம்சங்களைக்கொண்டு, தமக்கே துப்பாக்கி லைசென்சு கொடுக்கவேண்டுமென்று மனுப்போட்டு லைசென்சு வாங்கிக் கொள்ளலாம். அப்படி லைசென்சு கிடைக்கும் வரையில் துப்பாக்கியைத் தம் வசம் வைத்திருப்பது குற்றமாகும்.

கல்யாண
பட்டுநூல்
ஜவுளிகளுக்கு

ராதா ஸில்க்
எம்போரியம்

119, பெரியதெரு,
கும்பகோணம்.

சென்னை-600 008
187726

சரக்கு விற்பனைச் சட்டம்
The Indian Sale of Goods Act

எளிய தமிழ் நடையில் "வக்கீல்" பிரசுரம் 6 என்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. வியாபாரிகளுக்கு மிக அவசியமானது.

விலை ரூ. 1-8-0
தபால் சார்ஜ் பிரத்தியேகம்

மானேஜர் - "வக்கீல்"
தமிழ் சட்டப் பத்திரிகை
கும்பகோணம் (S. I.)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor*:—V. S. VIJAYARAGHAVACHARI, B. A., B. L.

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக்கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டி
யுடன் கிடைக்குமிடம் :

ராணி
ரெங்கய்யர்
சன்ஸ்

கைத்தறி
பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்,
கெருடலாயத்தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :—
20, லக்ஷிமிபுரம் ௨-வது தெரு,
மதுரை.

பெங்களூர் காஞ்சீபுரம் கும்பகோணம்
பட்டுச் சேலைகள் நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்க : : மூர்த்தி
கம்பெனி

கெருடலாயத்தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள் :
காரைக்குடி, நாட்டரசன்கோட்டை.

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு
மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி,
உரிமையாளர்கள்:—
மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்
தபால்பெட்டி நெ. 20,
புதுக்கோட்டை.

WRAPPER PRINTED AT THE ANDAVAN PRESS, KUMBAKONAM.

Regd. No. M. 5399. THE "VAKIL" September 1953

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊது வத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES
MADRAS.

For Coimbatore, Palghat & Nilgiris:

B. BALAPATTABI CHETTIAR,
246, Vysyal Street,
COIMBATORE.